பாமபணைமேல் அமர்ந்திருந்தாதன்றுமும்
இச்சையுள்ளபக்தர்சித்தர் அனைபருள்ளம்
இனைபிரியாநான்மறையின் பொருளுமானோன்
அச்சுதனேயென்று அண்டம் ரண்டமபோற்றும
ஆதிபரஞ்சோதியுமே வருகின்றாரே,

கிருஷ்ணமூர்த்திவருகிற-தரு.

பார்த்தசாரதியான பூர்த்தகாயாம்புமேனி
பராந்தாமசிதர கிருஷ்ணனென்வந்தேன்
பாவையர்கோவலர் பூவையைஆவலாய்
பன்னிராயிரபேர்க் கின்பம்தந்தேன்
சேர்த்தியுள்ளகுரானை சேர்த்தேன் ஙமன்பதிக்கு
கேசவன்நானே அன்பர் நேசனும்நானே (அரு)

கெம்மதியாகிய கொடியகஞ்சனை
படிமிசைமீதினில் மடியவும்செய்தேன் (பார்)
மதத்தமாபெண்தன்னை மிதித்தேகன் மண்ணில்மரைய
மடையவிரணியனுடலை கீறினேன்டாராய்
பண்டலமெண்டிசை யுண்டருள்கொண்டும்
வஞ்சியசோலையில் நெஞ்சமகிழ்ந்திடும
ஆதித்தசுக்ரீபன்கானை வதைத்தேன்வாலியையானே
குருவும்நானே வேதம் நாதனும் நானே (தரு)

தண்டதாடகையை கண்டவுடனவள்
மண்டையையுரிட்டிட தெண்டனைசெய்தேன் (பார்)
சீலமதனையளித்த நாதன்பெருவிரோதன்
கொக்கராமனிலாவன் நானே
சீரியமீரியதிரௌபதைக்கூரிடும் விண்ணவர்சிரமீட்டவன்நானே
பூதரிடமேல்பாலே காதலுடனளித்தேன்
போரதுபரிந்தேன் பவுண்டிக குரானையரிந்தேன் (தரு)
புத்தியுமாக்குணம பெற்றிடுமவர்கள்
உத்தமபுருஷரை சித்தமாய்காப்பேன் (பார்)
தூசில்பணிந்தவளை சேலவிழுதனனை
சுற்றித்துகிலிகர்ப்பட்டம தந்தேன்

கரிடமதகரி — சிதரிடமுதனையை
சுடுக்கனை தொடுத்து — மானெய்தேன்
சோலைகள்நு பூம்பல்லைப் — பலனைய மும் தன்னிலம் யும்
சுடர்முலையைமுத்து — சாம்பின்பாலன் (கரு)
சுந்தரனைச் சே — சிக்கையில் நிதித்திடும்
மைந்தன்கோபாலன் — செந்தமிழ்க்கருள் தரும் (பார்)

அர்ச்சுனன் சொல் செபம்.

திருத்துவாரகைவாச — சேதனை திசேதலோ
கொலதிரு — ஞானவேதநாதா
கருத்தினில்நினைப்போர்க்கு — காக்ஷிக்காணடிடும்
கருமேகவண்ணாமேல — கமலனேத்திரா
பொருந்ததோரிடையுள்ள — அல்லிதுரோபதையிட
பொருவிலைப்பட்டேன் — நிகைக்கலானேன்
வருத்தமாயென்மனம — வாடிடவுமிப்போது
வந்தனைகள் செய்து — சக்கதியென் சொலுவேன்
அரியமலைகாபோத — மாதியேகின்றேன்
ஆற்றினிலகாரத்த — புளிசாரமானேன்
கொடிதப்பிடிக்கலைக் — காண்தாராதேனன்
நீசெகாரமில் — வார்த்தையரிருவிரே

வசனம்.

சருணம் சருணம் பகவானே பென்மனமானது திகைத்திருக்கும் காலையில் காக்ஷிதருவ தபோல்வந்த கர்த்தனே மின்னிசொல்வந்த திருதனைக்கென்செய்வேன் கர்த்தனே.

துரோபதைசொல் கவி.

மூலமுச்சுடருமாகி முதுமனைசப்பொருளாய்வந்த
ஆலகாலத்துமேனி அணிமலர்க்கண்ணுவண்ணா
ஞாலமாயாகசேனி நர்ச்குரையசுற்றவேனும்
சீர்பெசக்கமலமன திருவடிபோற்றினேனே.

வசனம்.

வாரும்யெனது கர்த்தியமாகிய ஆதிமூலப் பொருளே அண்டரெண்டங்களை குட்சியிலடக்கிய யெனது அண்ணுவேயென்குறையை யகற்றவந்தசோதியே திக்கவந்தனம் யெனது அண்ணுவே.



கிருஷ்ணமூர்த்திசொல் கவி.

விரதசாரணியேவாழ்வாய் வேழ்வியிலுதித்ததங்கா
தரைதனில்கோலாகால தயாநிதியாயிருக்க
குறைவேதுயுந்தனுக்கு கொறறவரைவருகுதும்
விரைவுடனெனையழைதத விபரத்தையுரைசெய்யம்மா.

வசனம்.

வாருமயெனது தங்கா சிரஞ்சீவியாக சுமங்கிலியுடன் வாழ்வாய்யெமுந்திரும யெனையேது காரியமாய் நினைத்துவரவழைத்தாய் அந்தவிபரத்தைதெரிவிப்பாய் தங்கா.

தர்க்கம் தரு துரோபதைசொல்லல்.

ஆதிசோதியேசருணம் — யென் அண்ணுமலர்க்கண்ணு யிந்த
அகிலமுண்டருள் — சகலதயாபரா (ஆதி)
நீதிபஞ்சவர்களில் — நீண்டவில்விஜயநால் கருள்
விக்தனையானது — வந்துவைத்திட
விக்தையென்சொல்லுவேன் — னந்தவைகுந்தா (ஆதி)

கிருஷ்ணமூர்த்திசொல் தரு.

சிந்தனைவந்ததென்குராய் — யிந்தவேதன் உந்தன்நாதன்
சேரில்செய்தபழி — கூருப்நானறிய (சிந்த)
சிந்தைதளரவேண்டாம் — சேதியுரைசெய்யம்மா (கரு)
சித்திரவிஜயநால — குத்தமிதுவென
உத்தசேதியை — பத்தியாயுரைத்திடும் (சிந்த)

துரோபதைசொல் தரு.

யேழுபேர்தேவிமார்களில — ஒருகன்னி சிறைதன்னில்
நோம்பிமனமுருகி — தேங்கிடலாகுமோ (யேழு)
வாழும்புகழ்நினைக்கு — வருக்துமின்னொளிமாது கருள்
வாடியவளிடம் — நாடியேசென்றுமே
கூடிவிரென்றிட — மோடியுமசெய்குரார் (யேழு)

கிருஷ்ணமூர்த்திசொல் தரு.

மேகாரனளித்தசெல்வியாள — மின்னொளிமேல்மன்னவனுர்
விருப்பமில்லாமல — மிருப்பதென்னகாரணம (மேக)
தோகைசொல்லுமியோ — சுவேதநாலிகைமையேயா (கரு)
சுந்தாத்தங்கையே — அந்தவிதமதை
செதை ஒளிந்துமே — யெந்தனுக்கோதுவாய் (மேக)

துரோபதைசொல் கவி.

கமலநேத்திரனேவந்த கலக்கமுமென்னவென்றால்
விமலனார்பூசைசெய்து விஷ்டையிலிருக்குமாது
சமயமவ் வேளைதன்னில் தனஞ்செயன்பிடித்திழுக்க
அமையவுங்காற்றாலவதான் அதினாலேவருத்தமானார்.

வசனம்.

சாமியமகராஜனே மின்னொளியானது சிவபூசையிலிருக்கும்போது விஜயன்போய் அவள்பூசையைக்கலைத்து அவள்கையைப்பிடித்திழுத்து கோலாகலஞ்செய்யவே அவள்கோபங்கொண்டு கடிந்துபேசவே அர்ச்சுனன் [illegible] அவளிடம்போகாமல் இருப்பதினால் அதுவேகாரணமாக மின்னொளியானது சிறையிலிருக்கலானாள் சுவாமி.

கிருஷ்ணமூர்த்தியும் துரோபதையும்
தர்க்கம் தரு

| | |
|---|---|
| இந்திரன்குமாரனும் | சொந்தொருபெண்சிறைதன்னில் |
| சேர்க்கவும் மனம் | தேக்கவும |
| சந்திரகுலத்துதித்த | தர்மரிட மூவருக்கும் |
| தான்குறைவ தோஷம் | நீக்குமோ (தரு) |
| பார்குலத்தின் | போர்விஜயனும |
| சேர்ந்திடவே | சீர்பெருகுமோ (மிக்) |

துரோபதைசொல் தரு,

| | |
|---|---|
| உத்தமியிடத்தில்சென்று | நத்திசுகம்தாருமென்று |
| ஓதிடும் வெகு | நீதியாய் |
| சித்தமகிழ்வேதரிட | சத்தியம்வாக்கியப்போக |
| சொல்லிடும் வேண | நல்மொழி தரு |
| போதியெத்தனை | யோதிடனுமே |
| காதன்பேசாது | பேதாயில்லையாம (உத்) |

கிருஷ்ணமூர்த்திசொல் தரு.

| | |
|---|---|
| உருதியாய்கனிடத்தில் | பிரிதிதன்னைக்கூறியின்றும் |
| ஒப்பிடாமொழி | செப்பினான் |
| கருதியமின்னெரிதவரி | கருதியவிஜயன்தன்னை |
| துவட்டுவேன் வார்த்தை | புகட்டுவேன் (கரு) |
| சொன்னசொற்படி | மன்னனர்ச்சுனன |
| மின்னொளியவ | தன்னைச்சேரவே (உரு) |



துரோபதைசொல் தரு,

| | |
|---|---|
| நல்லமொழி அர்ச்சுனர்க்கு | சொல்லுவது நன்மை |
| வேலுனாதனே மலர் | பாதனே |
| மெளவியும்சிறையாகஸ்றி | வல்லவனுடன்மகிழ்ந்தால |
| வேண்டியேபுகழ் | ஆண்டவா (நல்) |
| மேகசாமள | லோகநாயகா |
| பார்த்திசனையும் | தோகைவந்தனம (நல்ல) |

கிருஷ்ணமூர்த்திசொல் கவி.

என்னிட தங்கையேயுன் னிஷ்டத்தின்படியேயந்த
மின்னொளியிடத்திலிப்போ விஜயனையனுப்பிவைப்பேன்
மன்னன்னைவாருமிகவே மைத்துனனென்சொற்கேளும்
கன்னிமின்னொளியினக்கு கடுகெனயேகுவாயே,

வசனம்.

அடிகேள், கேளும்தங்கையே உன்னிஷ்டத்தின்படியே மின்னொளியிடத்திலிப்போ விஜயனையனுப்புவேன் அகோவாரும் மைத்துனனென்சொற்படிக்கு மின்னொளியிடத்திற்கு யேகுவாயே,

அருச்சுனருக்கும் கிருஷ்ணமூர்த்திக்கும
தர்க்கம்-தரு.

| | |
|---|---|
| என்னவார்த்தைகள்புகன்றீர் | அதிரமாய் பரந்தாமா |
| சிந்தமொழியுரைக்க | சிந்தையுருகுதே (என) |
| கன்னிமின்னொளியிட | வர்ண்ணமேனியான்சென்றால் (கரு) |
| காணவுமெதிரினில் | ஞானமதாகவே |
| நாணமுமாகுமே | வேணுகோபாலா (என) |

கிருஷ்ணமூர்த்திசொல் தரு.

| | |
|---|---|
| மின்னொளிமினைசேரவும | வெகுநாளாம் அவமானம |
| வெட்கமாருமென | மிக்கவுமேயோதாய் (மின்) |
| தன்னிடதேவிமனை | முன்னமசெல்லாதிருந்த கருள் |
| சந்திரனுமுடன் | அந்தமகத்தியே |
| விந்தையையோயும் | சுந்தரமன்று (மின்) |

அர்ச்சுனன்சொல்-தரு,

| | |
|---|---|
| அய்யோவிதென்ன கொடுமை | அவன்செய்த வெண்ணலைத |
| அவமதிப்பானதை | புகலுமயோமோ (அய்) |

மைதயலாளிவபூசை தவித்தனென்றெனையவர் (குருள்)
தாதிகளாலெனை மோதியேதள்ளவும்
பாதமிருண்ணிலே நீதியோபோக (ஐய்)

கிருஷ்ணமூர்த்திசொல் தரு.

பூசைதனையழித்த உனைப்பிடித்து கட்டியடித்து
பூட்டியேவிலங்கிட் டோட்டிடவேண்டும் (பூசை)
ஆசையுடன்சூரிய அர்ச்சியமகொடுக்கயானும (தரு)
அச்சமிலலாகவென் வெச்சலேதப்பிட
உச்சிதமென்சமர் லச்சையுமரிந்திர் (பூசை)

அர்ச்சுனன்சொல் கவி.

மையவன்தன்னையீன்ற மைபதமுண்டகாதா
செய்யுள்ளமாதிடத்தில செல்லவேவேணுமென்பீர்
சைதனில்தங்களுக்கு நற்செய்தனைசொல்லப்போரேன்
உரைகுலீருபாயமொன்று உபகாரநாதனேபோற்றி,

வசனம.

வாரும்சுவாமி பகவானே தாங்கள்சொல்லும் வாக்குத்தைதகுது பதித்துசொல்ல அடியேனால்முடியாது ஆகையால அந்தமின்னொளியிடமசெல்ல ஒருபாயமசொல்லும பகவானே.

கிருஷ்ணமூர்த்திசொல் கவி.

தந்திரமாய்மின்னொளியாள் மடந்திக்கேக
னருசெயவே குறத்திவடிவாகிப்ும
சுந்திரமாய்கூடையொன்று பிடிப்பிலவைத்து
சொர்ப்பெரியதாம்புகயர் அவிழ்கப்கொண்டு
யிந்திரர்க்குரியுரைக்கும குறத்தியென்று
பிச்சையுள்ளவித்தியெல்லாம குரங்கள்பாடி
விச்சையுள்ளமின்னொளியின் மனையிலேதி
பெலவிபிடமணமரிந்து கூடுவீரே.

வசனம.

வாரும் அர்ச்சுனமகாராஜனே! நீகுறத்தியாகரூபமெடுத்துக்கொண்டு குறிசொல்லும குறத்திக்குஉண்டாகிய மருந்துவகைபரக்களுடன்மின்னொளியாளிடமசென்று குறிசொல்லி அதின் வாக்குத்தைதவிர்த்துவாரும வைத்துறு



அர்ச்சுனனுக்கும கிருஷ்ணபகவானுக்கும
தர்க்கம்-ஜம்பை-தரு.

குறமாதயுருக்கொண்டு, கோதையிடமனைசெல்ல
வரவேண்டுமெனக்குதருனை வைகுண்டபரிவாசா

கிருஷ்ணமூர்த்திசொல் தரு,

வரவேண்டுமெனுனையென்ற வல்லவனேவில்விசையா
மாலாமல்லியேனதாதித்தால மங்கையுன்கைவசியமப்பா

அர்ச்சுனன்சொல் தரு.

சிந்தைதனிலுந்தனிட திருவடியையுருதிகொள்வேன்
சுந்தரியைகூடுவது சோதியேயுன்செயலோ

கிருஷ்ணமூர்த்திசொல் தரு.

பைந்தொடியாளுனைகூட பலகாலுமினைந்துருகி
சிந்தையுடனவளிருப்பாள் தியங்கமலேவிடுவாய்

கிருஷ்ணமூர்த்திசொல் கவி.

அல்லிதுரோபதையேயெந்தன் அன்புள்ளதங்கைமாரே
வல்லதோர்விஜயனாரை வணக்குரமாதைப்போலும்
வெல்லேயிலவருமெச்ச விதத்தமலங்காரத்து
மெல்லிமின்னொளியனைக்கு விரைவுடனனுப்புவீரே.

வசனம்,

வாருமெனது தங்கயர்களாகிய துரோபதாதேவி அல்லியரசாணியே யிந்தபூமியில் சகலருமமெச்சும்படியான குறத்திவடிவம்தரித்துகுறிக்கூடையொன்றும கொடுத்துசகலவிதஅவிழ்தவகையாரக்களுடன் மின்னொளியாள்மனைக்கு அனுப்பவையுங்கோள் நானதுவாராபுரிக்குப்போய்வருகிரேன் தங்கைமார்களே.

அர்ச்சுனன்சொல் வசனம்,

வாரும்துரோபதா நானென்னமாய் குறுரூபங்கொண்டு அவள் அரண்மனைக்கு போவேன் பெண்ணே.

துரோபதைசொல்-கவி.

திகழும்சாமர்த்தியரேயுன் சேதியபரிதிறப்போம்
பாருசெய்மறைபோற்றி பாரியசெல்வனைத்தாய்
விகடமாவல்லியர்க்கு வேடிக்கைசர்ப்பமாறாய்
தகமுடன்கூடைதிரைக்காய் சன்யாசிபுருவெடுத்தாய்
மகுடமாமுடிதரித்து மருவேஷமகொண்டுபோவாய்.

வசனம்.

வாரும்பிராணநாயகரே யெனக்காக பிரமணவேடங் கொண்டுவி ல்லினைத்து யென்னைமாலையிட்டீர் யெனதுதமைக அல்லியர்க்காக சர்ப்பமாகவுருவெடுத்தீர் சுபத்திரைக்காக சன்யாசியர்னிர்ப்பபடியினே கவிதவேருருவம கொண்டதுபோல் யிந்தவுருவத்தை விட்டுவேருருப மெடுத்தாவது மின்னொளியாள் மடலைதவிர்த்துவாரும் அவரபிபிராணநாயகா.

அர்ச்சுனனுக்குந் துரோபதைக்குந்
வாதம்-சம்பைதரு.

விரதசாரணிமாதே வேடமென்றுநான்பூண்டு
கருதியந்தமின்னொளியாள் கட்டழகியிடஞ்சேர்வேன்.

துரோபதைசொல்-தரு.

சுத்தவிந்தைதனைப்பேசும் வித்தகனேயரியா
ஒத்துகளையிந்தவர்கள் சிருலகிலாருமில்லை

அர்ச்சுனன்சொல்-தரு.

வேடமென்னகொண்டாலும் மின்னொளியுந்தானிவள்
கூடிப்பிதவேரஜனையை கொம்பனேயெனக்குரைப்பீர்

துரோபதைசொல்-தரு,

திருவுருவுதன்னைமாத்தி அருவையெனக்குரத்தியதாய்
பருதியொளிக்குரத்தியைப்போல் பார்த்திபாவடிவெடுப்பீர்

அர்ச்சுனன்சொல்-கவி

சரிவிதுயென்னேயென்னை தையலர்கண்டிடாளை
பிரிதியாய்குரத்திவேடம் பேதையைஜோடித்தாக்கால்
திரிலோகமமரர்கண்டால் தியங்கிடுவண்ணமாக
உரியதோர்குரத்தியென்று பொட்டிடச்செய்குவீரே.

வசனம்.

வாரும்பெண்ணே துரோபதாயென்னே அண்டத்திலுள்ளதேவர்கள்கண்டு நன்றாய்படி குறத்தியாக யுங்கள் யெண்ணப்படி. யென்னை ஜோடித்தால் உங்களிஷ்டப்படி போய்வருவேனென்னைகள.

துரோபதை-வசனம்.

வாரும்தங்கை அல்லியே நம்முமனோரை குரத்தியாகவேடந்தரித்து யிடவேரும்தங்கா.



அல்லிசொல்தரு.

அச்சுதன்மைத்துனரை பசகிளம் குரத்தியைப்போல்
இச்சையுடனல்லியரும் யேற்றிஜோடிக்கலுற்றார்
அருபத்துமூன் றமுமம அனேகன் கூந்தல்தன்னை
மருவாசயெணையிருல் வாரிமயிர் முடித்தாள்
நல்லமணமிருந்த நருமலர் தனைமுடித்தாள்
கஸ்தூரிமஞ்சளுடன் களபபரிமளிக்க
சொஸ்தமுள்ள மேனியெல்லாம் தோகையரும பூசினருள்
ரத்தினக்கமமல்சிமிக்கை நாகவடமசெப்புடனே
கொத்துமுத்து முருகுகள் கோர்வைசாமாலையிட்டாள
மூக்குத்திபுலாக்குநத்து மோப்புவளையலிட்டு
நேர்க்குவிழிமையெழுதி நீலவர்ணபொட்டுமிட்டாள்
கொக்குவக்கா கோர்வைமணி குச்சுமணி பச்சைமணி
பக்குமணி தாழ்வடமும் ஆரமசரப்பளியும
பச்சைவர்ணரவிக்கையும பாவாடைதாவணியும்
கொஞ்சியக்குரத்தியைப்போல் கோலதயலங்கரித்தாள்.

அல்லிசொல்-கொச்சகம்.

அருந்தவத்திரா வுதித்த அம்மணியென்னுச்சியரே
பொருந்தியதோர்தனஞ்செயநார் பூங்குரத்திவேடமதை
பெருந்திகழுமகதிரொளிபோல் அவள்பேரழகையென்னசொல்வேன்
கருங்குழலாள்தன்வடிவை கண்டுமனமகிழ்வாயே.

வசனம்.

வாருமம்மா யென்னுச்சியரே நம்முடைய நாயகர் குரவடிவைப் பார்க்க யாவரால்முடியும் யென்னவடிவம்மாதாயே,

துரோபதைசொல்-கொச்சகம்.

யெந்தவடிவெடுத்தாலு யேர்க்குமடிநாளவர்க்கு
சுந்தரசவுந்தரியம சொல்லமுடிபோகாது
அந்தரத்தோர்கண்களிக்கும் அர்ச்சுனர்க்குரத்தியரை
வந்திடவேசொன்னேனென்று வரவழைப்பீர்சபையில்

வசனம்.

வாருந்தங்கையே அவர்யென்னவேடமகொண்டபோதிலும் வேடிக்கைபாக்கத்தான்யிருக்கும் அவரையிச்சபைக்குவரும்படி செய்யுமம்மாதங்காய்,



குறத்தி வருகிற-கவி.

வச்சிரமணியும் வதனமும் துலங்க
வடிவுடைய கொடியிடை துவள
கச்சுடன் தன்னுடை காலிலிலங்கைய
கனக மடமயிலெனவும்
உத்தமமான குறமாதர் புகழும்
ஒளிபெரும மணிபணிமணிக்கு
பசுமைநாக்கிளிபோல் பார்த்திபக்குறத்தி
வையகிளிசபைக்கிதோ வாரள்.

குறத்திவருகிற-தரு.

விசையநகர்க்குற மெல்லியலவந்தாள் — விநோதக்குறி
விசையநகர்க்குற — வஞ்சியும்வந்தாள் (விசை)
விசையநகர்க்குறவஞ்சிவந்தாளே — விரதசாரணிமுனமே-தரு

விண்ணுமண்ணுமேரர் — பெண்ணைநகைக்கிட
கனவிமின்னொளி — கருணைமிகுமென (விசை)

சொக்குவக்காவும் கோர்வைமாலைகள் — குலுங்கியாட
அக்குமணியாரமாட — அருவையர் மகிழ்ந்தாட-தரு

அந்தம்பெருகொளி — கந்தமலரணி
சந்திரப்பிரையென — தந்தமிலடகிட (விசை)

வஞ்சிதுரோபதை கெஞ்சமகிழ்வே — வளைக்கிளிபோல
புருசவரிடதங்கையான — பார்த்திபக்குறத்தியான-தரு

படிமிசைபுகழ் — வடிவில்ரதியென
கொடியிடையுடன் — நடைகுலுங்கிட (விசை)



நாவலராடி... — கல்லாப்பாணையம்விசழ்
மேவியசன...மதாதித்த — விசு...மக்கினிகுலத்தாதித்த-தரு

சாமியின்றிடும்
விருக...முத்து — ...செய்ததமிழிது (விசை)
திருக...ர்பாணையம்
மேவ...

புன்னகையுடன்மகிழ்ந்து
அன்னம்போல்... — யாகசேனிமுன் (அர்ச்)
அர்ச்சுனக் குறத்தியும்வந்தாள் — மின்னொளியிருக்காளென்று
என்னையிந்த கோவைசெய்ய — மிகோகாசான்வந்தேன் (அர்ச்)
ஈசனையடித்தகுறத்தி — சொக்குவக்காமணிகட்டி
குச்சமணிகோர்வையுடன் — பார்த்திபக்குறத்திவந்தேன்
பச்சைமேனியச்சுகர்க்குமசினியென்ற — தர்ப்பமிடதங்கையான
சந்திரக்குலத்தாதித்த — மிளக்குறத்தியாகசேனைமுன்வந்தேன்
மித்திரன்குமாரத்தியாகிய

அல்லிசொல்-கொச்சகம்.

இஷ்டமுள்ளபூங்குறத்தி யிவ்வமயமேயுன்னமுகை
துஷ்டருனை கண்டிருந்தால் தொடர்ந்திருக்குமெய்மைதான்
இஷ்டியாதுதான்கழிப்பேன் சிங்காதனமிருப்பிர்
அஷ்டதிகைத்தான்மகிக்கும ஆலாத்திகத்திநவே.

அல்லிசொல்-தரு.

காணமடக்குறத்தியர்க்குவந்த — கன்றுருவிலங்கிடவே
வேண்டியசொராலத்தி — மெல்லியவள்தானெடுத்தாள்
முத்துமணியாலத்திதனையெடுத்து — மூன்றுதிரிதானேத்தி
சுத்தியந்தகுறமாதை அல்லியும் — சுற்றியெரிந்தனளே

துரோபதைசொல்-கவி.

பச்சிளமகொங்கையான பார்த்திபக்குறத்தியாரே
மிச்சைபோல்குறியுரைக்கும் மிரத்தினகூடைதன்னில்
உச்சிதமருந்துவர்க்கம் உகமைகள்யாவும்வைத்தேன
கச்சணிகூடைதன்னை கன்னியேயெடுத்துசெல்வாய்.

வசனம்.

வாருங்குறமாதே உசிதமானயிந்தக் குறக்கூடையில் விநோதமான மருந்துவர்க்கயாக்களுடன் தந்தேன் யெடுத்துக்கொண்டு மின்னொளியாள் அரண்மனைக்குச்சென்று அவள் சிறையைநிவர்த்திசெய்து வாருங்குறமாதே.

அல்லிசொல்-கந்தார்த்தம்.

அரனுடன்சமர்புரிந்து அரிவரம்பெற்றுநின்ற
திரமையானரியவேண்டி திகழ்கூடைதனைபரித்தேன்
வரமருள்சிவனிடத்தில் வாங்குவீர்கூடைபார்ப்போம்
சரமணிவஞ்சியரே.

அல்லிசொல்-தரு.

சங்கரனிடத்தில்கூடைவாங்கும  வரப்பெற்று
இங்கிதக்குறத்தி  வாங்கும்
பைங்கிளியேயுன்திரமை  மங்கையரியவேணும்-கருள்

பத்தியாயொரு  சித்திரக்கூடையும்
அத்தனார்தனை நத்தியேவாங்கும்  சங்கர

குறத்திசொல கந்தார்த்தம்.

யீசனேகயிலாசவாசா யிறைவனேகருணையா
வாசமாங்கூடைதன்னை வஞ்சியும்பரித்துகொண்டார்
நேசமென்தேவிமார்கள் நிலமையைக்காணவேண்டி
பூசனைபுரிந்தேன்யானும்.

குறத்திசொல்-தரு.

பொற்கூடைதாரும் சிவசங்கரா  அற்புதாநீரும்
மைக்குழல்மாரெந்தன்  வல்லமையரிந்திட-கருள்
தெய்வமெனமேலோர்  செம்பொன்கூடையும்
அன்புடனருள்  யின்பநேயனே (பொற்)

குறத்திசொல்-கவி.

தனஞ்செயக்குறத்தியர்க்குசங்கரன்மனமகிழ்ந்து
கனம்தரும்வச்ரக்கூடை கடவுளுங்கிருபைசெய்ய
அனந்தமாய்குறத்திகையில் அரன்கூடைவரவும்கண்டு
மனந்தனில்மகிழ்ந்தியோங்கி மாதர்கள்மகிழலுற்றார்.

வசனம்.

இந்தப்பிரகாரம் அல்லியும துரோபதையம்மனும் கொடுத்த கூடையை அர்ச்சுனமகாராஜனுடைய சாமார்த்தியத்தைபார்க்கவேணுமென்றுபரித்துக்கொள்ள அப்போது அர்ச்சுனமகாராஜன் யீஸ்பரனைக்குறித்து தவத்தியம்செய்ய அப்பொழுது ஆகாயமார்க்கமாய்கூடையைவரவழைக்க வந்தகூடையை குறத்தி வாங்கிக்கொண்டு சொல்லுகிற விதங்காண்க,



குறத்திசொல்-கவி.

திருமணப்பெண்ணுக்காக சிப்பதுயொளித்தாப்போலும்
மருமலர்மாதேநீங்கள் வாங்கினீர்கூடைதன்னை
கருதியேநீங்கள்செய்த கபடவஞ்சனைக்காகாப்போ
குருபரனளித்தவச்ரக் கூடையைபார்த்திடீரே

வசனம.

வாரும்பெண்களா நீங்கள் குறிக்கூடையை கொடுத்தாப்போல் கொடுத்து அதைதிருமபிபரித்துக்கொண்டீர்கள் யிதோ கடவுளால் யெனக்குக்கிடைத்தவச்சிரக்கூடையைப்பாரும்பெண்களா.

துரோபதைசொல்கவி.

வானவரசுரர்மெச்சும் வஞ்சிபூங்குறத்தியாரே
தானுமந்தனுரிதிகொண்டு தையலார்மனமகிழ்ந்தோம்
ஞானமாமின்னொளிக்கு நற்குறியுரைக்கும்வண்ணம்
ஆனதோர்குறியெனக்கு அருளவேயுரைத்திடீரே.

வசனம.

வாரும் குறமாதே உன்சாமார்த்தியத்திற்குறம்பவும் மெச்சினோம் நீ அந்தமின்னொளிக்குச்சொல்லும் குறியைப்போல் யெங்களுக்குஉண்டாகியகுறிகளைச்சொல்லும குறமாதே.

குறத்திக்கும்துரோபதைக்கும்தர்க்கம-தரு.

மொய்குழலேயுங்களுக்கு  முதல்முதல்குறியுரைத்தல்
தக்கதெனனயெந்தனுக்கு  தருவீர்கள்மங்கயரே

துரோபதைசொல்-தரு.

பாவையசங்குறத்தி  பஞ்சவர்னரத்தினமே
தாவியெதை கேழ்க்கினும்  தருவேனிளங்கொடியே

குறத்திசொல்-தரு.

ஆரம்சரப்பளியும்  அணிந்தனவமணியும
தாரும்தருங்குழலே  தக்கதோர்குறியுரைப்பேன்

துரோபதைசொல்-தரு.

மாணிக்கபதக்கமும்  வச்ரமணிதாழ்வடமும்
பூணாவாய்பூங்குறத்தி  பொருந்தக்குறியுரைப்பாய்.

குறத்திசொல்வசனம்.

வாரும்பெண்களா அந்தப்படியேகுறிசொல்லுகிறேன் கேளும் பெண்களா.

குறத்திசொல்-கவி.

முதல்முதல்துதிபுரிந்து செல்லியரே
பிள்ளையார் பிடித்துவைத்தேன்
சாலமில்லாதெய்வமதனை தானினைந்து
சாம்பிராணிபுகைகாட்டி தீபமேற்றி
கோலமுள்ளகுறிக்கூடை முன்னேவைத்தேன்
கோமளையாள் விளைத்தகுறியருளவேணும்
சாலக்கிளியென்றையுனை தோத்தரித்து
தெய்வங்களை தானினைந்து போற்றல்செய்வாள்.

குறத்திகுறிசொல்-தரு.

ஐங்கரன்ராள்கணபதியே வா-வா-வா-வா
அறுமுகனேவள்ளியுடன் வந்தமரும்
பரமனுடன்பார்வதியும்-வா-வா-வா-வா
பச்சவர்ணலக்ஷுமியும் வந்தமரும்
இந்திரதேவர்களே-வா-வா-வா-வா
ஈசன்சடைமேவுமகெங்கை வந்தமரும்
சுந்திரமுனிவர்களே-வா-வா-வா-வா
தாருபெல்லைக்காளியரே வந்தமரும்
அயென்பிடாரிதுர்க்கை-வா-வா-வா-வா
ஆணிமுத்துவீரதுரை வந்தமரும்
தையலேழுகன்னியரே-வா-வா-வா-வா
தண்டியக்காரியகே வந்தமரும்
இடும்பாகடம்பாயியகே-வா-வா-வா-வா
ஈஸ்வரியேமாரியுமை வந்தமரும்
சந்திரசூரியரே-வா-வா-வா-வா
தனஞ்செயக்குறிக்கூடை வந்தமரும்

குறிசொல்-தரு.

தேவதைகள்வருகிறதுநீ தெரியுதடிபெண்ணே
சிவன்தந்தனடயது கழறுதுபார்முன்னே



பாவையுந்தன்கைமலரை காட்டுமடிபெண்ணே
பாஞ்சாலன்செல்வியென்று பகருதடிமுன்னே
வில்லூட்டினைவேள்விதனில் மெல்லியுந்தீயுதித்தாய்
விசயனுக்குயுனைத்தரவும் வேந்தர்களுமுன்றித்தார்
அல்லிலுடன் ஐவர்களும் அரக்குமாளிகையில்
அருந்தணலிலிரந்தாரென் றதிகமனமிளைந்தாய்
பாரியவில்வளைத்தவர்க்கு உனைத்தருவேனென்று
பாஞ்சாலன்உன்தந்தை பகர்ந்துபொய்யோ
வீரியர்களைவருமே வேதமறையோராய்
விஜயன்பெருமவில்வளைத்து விருமபிமணமுடித்தார்
பார்த்திபன்உனைமணந்தார் பஞ்சவர்க்குபொதுவாய்
பாருலகிலுன்புகழை பகரவெளிதல்ல
போற்றியநான்தேவதையை பொருந்துங்குறியுரைத்தேன்
பொய்யுண்டோமெய்யாக புகலுவீர்மாதே.

துரோபதைசொல் கவி.

கண்டதுகண்டார்ப்போலும கன்னிநீயுரைத்ததெல்லாம்
உண்மைதான்உண்மைமாதே மொழிபிழையில்லை
வண்டணிதுளபமருடு மாலயன்மார்பில்மெச்சும்
கெண்டைசேர்விழியேயல்லிக் கிசைந்திடகுறிசொல்வாயே.

துரோபதைசொல் வசனம்.

வாரும்குறமாதே நீசொன்னதெல்லாம சரிதான் அல்லிக்குச்சொல்லிவாருமாதே.

குறத்திசொல வசனம்.

அப்படியேசொல்லிவருகிறேன் கேளுமபெண்களா.

குறத்திகுறிசொல் தரு.

ஐங்கரனை அருள்புரிவாய் அல்லியரேயுந்தனுக்கு-ஓயமமே
அன்புகுறிகேளடிநீ செங்கரத்தையென்முன்னே
மங்கயரேகாட்டிடிடி நோய்குறியுரைப்பேன்-ஓயம்மே
தேர்விஜயன்தேவியரே பாண்டியர்க்குசெல்வியதாய்
பாவையுதித்தாய்நீயும் பட்டமதுதான்தரித்து-ஓயம்மணி
பாருலகம்ஆண்டதுண்டோ ஆண்டிருக்குமகாலையிலே
அர்ச்சுனனுமடன்னையவர் அன்புடன்புணர்ந்தாரடி-ஓயம்மே

உடன் அரசை வெடுத்தாரடி.
சொன்னபுத்திகேளாத தோகையென்றயுன்னை
சொந்ததந்தைபக்றுவெல்லாம் ஒயயமணி
துவித்துவைக்காரடி.
பொன்முடிதரித்திருந்த பூவையரேயுங்களையும்
பேர்விஜயன்தாரமசேர்ந்து ஒயமமணி
புத்திரனையீன்றயடி
அல்லியரேயுன்னைப்போலும் அர்ச்சுனர்கு ஆருபேர்
அருவையர்கள்உண்டோடிகாண்-ஒயய்மே
ஆரமுலைமாதரசே
சொல்லிவந்தகுறிகள்திர சொர்ப்பமுதுமுண்டோ
சந்திரமணிசுந்திர ஆரம் ஒயம்மணி
சொன்னபடி தாராயோடி.

அல்லிசொல்-கவி

இந்திரக்குறத்தியாரே நீசொன்னகுறியிலொன்றும்
குந்தகமில்லையமா கொடுத்தேனேபொர்ப்பதக்கம
சுந்தமாமலர்கள்சூடும கன்னியாள்மின்னொளியினைகுரு
சந்திரவதனமுள்ள தையலேயேகுறமே.

வசனம

வாரும்குறமாதே யெங்களுக்குச்சொன்ன குறிகளில்யொன்றாகிலும்பிசகில்லைசரிதான் நாங்கள்சொன்னபடிசந்திராரம முத்துமாலையையும் யிந்தாரும் அணிந்துக்கொண்டு மின்னொளியாளிடம் சென்று குறிசொல்லி அவள்சிறையை நிவர்த்திசெய்துவாரும குறமாதே.

குறத்திசொல்வசனம்,

அப்படியே போய்வருகிறேன் மாதர்களே.

குறத்திசொல் கவி

பாண்டியனு ரீன்றெடுத்த அல்லியர்க்கும
பாஞ்சாலன்ப வை துரோ பதையாளுக்கும்
வேண்டியதோர் குறியுரைத்துவசையவஞ்சி
மின்னொளியாள்மடமேக யெழுந்திருந்து
கண்டபக்குறத்தியரு மனமகிழ்ந்து
கனகுறமாதர்கள் விருதுபூண்டு



நீண்டவச்சிரமணிக்கூடை சிரமேற்கொண்டு
சேர்விஜயபூக்குறத்தி வீதிவாராள்.

வசனம்.

இந்தப்பிரகாரம் துரோபதைக்கும் அல்லியர்க்கும குறிகளுரைத்துவிட்டு அவாள் கொடுத்த ஆபரணங்களையும் அணிந்துக்கொண்டு மின்னொளியாள் மனைக்குசெல்லும்படி சிரசில்கூடையுடன் குறத்திவடிவுடன் அர்ச்சுனமகாராஜன் குறம்பாடிக்கொண்டு வீதியில் வருகிறவிதங்காண்க,

குறத்திசொல் தரு,

காணக்குறத்தியைப்போல் — விஜயக்
கன்னிகுறவஞ்சி — வாராள்
கச்சணியும்சங்குமணி — கழுத்தில்நிரையக்கட்டி
பிச்சையுடன்கேட்பவர்க்கு — மிசைந்தகுறியுரைப்பேன்
பச்சைபொட்டுகுத்தலியோ — ஒயம்மணி
பாண்டவர்கள் — வீதியிலே (காண)
பாலர்கள்விளையாடவும் — விநோதமான
பச்சைசிறுசிலுப்பை
பஞ்சவர்ன்னமேனைக்கயர் — பயர்போல்கொடிக்கயர்
அஞ்சுகதாம்புக்கயர் — அடுக்கிலையுரிகள்
வஞ்சியரேகொள்வீர்களோ — ஒயம்மணி
பஞ்சவர்கள் — வீதியிலே-(காண)
வச்சிரமணிகூடையிலே — அனேகவித
வகையான — அவிழ்தமுண்டு
அந்தரத்தமரர்களை — அழைக்கும்வசியமுண்டு
மந்திரதந்திர — மலையாளமூலிகையும
சந்ததியில்லாதவர்க்கு — குளிசமது
தையலர்களே — கொள்வீர்களோ-(க.ண
வேர்வகையும் — பச்சிலைகள்
வியாதிக்குவேண — மருந்துமுண்டு
கூடைமுரம்சல்லடைகள் — கட்டிமுடைந்திடுவேன்
சூன்குறுபெண்வாடுக் — குசந்தமருந்துகளும்
நான்வாழாப்பெண்களுக்கு — அருந்தவசியமருந்தும்

| | |
|---|---|
| காண்கொடுத்த அவிழ்தலைகை | ஒப்பமையாரே |
| மிக்குகாளிகம் | மெத்தவுண்டு (சாண) |

குறத்திசொல் கவி.

கச்சவரிஸ்தனமிலங்க காண்டைபக்குறத்தியாரும்
மிசைசைபோல்பலீலிதிவெங்கும் மிசைக்துகற்குறம்வன்பாடி
பச்சைமாலருளால்வந்த பாண்டவபுதல்வராமேனர்
கொச்சிலக்குறத்திமுன்னே கூடியேவருகின்றாரே.

வசனம்.

இந்தப்பிரகாரம குறத்திபாண்வன் பாண்டவன்வீதியில் குறம் பாடிவரும்போது பஞ்சபாண்டவர்கள் புத்திரராகியகடோர்க்கஜன் அரவான் பப்பிரவாகன் புலந்திரன் அபிமன்னன் தொந்திசட்டியிவர்கள் குறத்திமுன்பாகவருகிற விதங்காண்க.



கடோர்கஜன்சொல்-கவி,

வெற்றிபெருபவிஜயனிட புதல்வரான
விவேகமுள்ளபுலந்திரனும அரவானவன்
நற்றவத்திகர முதித்த பப்ரவாகன்
நன்மையுள்ளஅபிமன்னன் கர்லவரோடு



குற்றமில்லாவிமலிட பாலகான
குணமுடைய கடோர்க்கையனொடொந்திசட்டி
மற்றமுள்ளசிருவருடன் பள்ளிவிட்டு
மயேயாளகுறத்திமுன்னே வருகின்றாரே.

கடோர்க்கஜன்சொல் தரு.

| | |
|---|---|
| அந்தரத்தமரர்மெச்சும் | சந்திரக்குலத்துதித்த |
| அய்வர்புதல்வர்மேவிநார் | அருங்கதிரொளியென |
| பெருந்தவமணியென | அய்வர் |
| செந்தமிழ்விளங்கிமெ | சீர்பெரும்பள்ளிவிட்டு-கரு |
| சித்திரபஞ்சவர் | புத்திரசிகாமணி |
| மிகதலமபுகழ் | வெத்தநலமணி (அங்) |
| அரவான்புலந்திரனும் | அபிமன்னன்பப்ரவாகன் |
| அதிபெலவீமன்பாலனும | அநதமிகுந்தவன் |
| தொந்திசட்டியுடன் | அதிபெல |
| சரவேகம்சரவேகம் | சற்றக்கடோர்க்கயனும்-கரு |
| கனிவுள அனையர் | கண்டுகளித்திட |
| மாலிலமன்னவர் | வாழ்த்திமகிழ்ந்திட (அங்) |
| பள்ளியவிட்டகன்று | பகலமுதுண்ணவென்று |
| பாட்டுத்தகமேந்தியே | பலபலபாதைகள் |
| நலமுடனேதியே | (பாடபுத்) |
| துள்ளிக்கெந்துகளபாய்ந்து | துலங்கும்பணிகள்பூண்டு-கரு |
| துட்டியுமிலதப் | பொட்டுமிலங்கிட |
| தட்டியேசங்குகள் | ஒட்டிவிருக்கியே-அந்த |
| சந்திரப்பிரையுடனே | தரித்தசட்டிகள்பின்ன |
| தண்டைசதங்கைகொஞ்சவே | தங்கக்கடகமும் |
| செங்கைகயிலங்கிட | (தண்டை) |
| கொந்தலர்அழல்மாதர் | குறத்திவரவுங்கண்டு கரு |
| கொஞ்சியாஞ்சித | வஞ்சியைக்காண |
| நெஞ்சமகிழ்ந்திட | மிஞ்சியேநடந்து (சத்தி) |

கடோர்க்கஜன்சொல் கவி.

சிங்காரத்தோழிமாரே சீபள்ளிவிட்டகன்றோம
அங்கமுமகிழ்ந்துநாமும அழகுள்ளநதிக்கேபோகி
மங்களஸ்நானஞ்செய்து மருவியேவிளையாட்டாக
தங்கமல்லெந்தன்பின்னே சலதிபாய்வருகுவீரே.

வசனம்,

வாரும் தம்பிமார்களே தோழர்களே! நாம் பள்ளிக்கூடம் விட்டு போஜனத்துக்கு அரண்மனைக்குபோக வேண்டியதால் கெங்கையில்ஸ்நானத்திசெய்து குளித்து ஜலக்ரீடைசெய்து சிலநேரம்பந்து விளையாடி அரண்மனைபோவோம் வாரும்தம்பிமார்களே.

தர்க்கம்-தரு-கடோர்க்கஜன்சொல் தரு.

| | |
|---|---|
| | ஜலத்திலாடுவோம் |
| தம்பிமார்களே தமையா | தானேயோடுவோம் |
| நாவிமேவிகூவியேவி | நுலாவும்கெங்கையில் |
| உம்பர்பிராணசதையிலின் | உள்ளம்மகிழுவோம் |
| ஓடியாடிகூடியாடி | |

அரவான்சொல் தரு.

| | |
|---|---|
| கடோர்க்கயாமுற்குரேன்யான் | கண்டுபிடியடா |
| கடிமுடிகெருதியோடு | காலைவாயண்டா |

கடோர்க்கஜன்சொல்-தரு.

| | |
|---|---|
| விட்டேனென்றுபாய்ந்துயானும் | விரைந்துவாரண்டா |
| விசயாயிசையபுஜமுமசைய | வேகப்பாரடா |

அரவான்சொல் தரு.

| | |
|---|---|
| தொந்திசட்டியெனைபிடிக்க | நாடர்ந்துவாயண்டா |
| நாரிமிரிகூரிவீரம் | சொல்லிநீந்தண்டா |

கடோர்க்கஜன்சொல் தரு.

| | |
|---|---|
| மூழ்கிவரும் அரவான்தன்னை | வந்துவளையுங்கள் |
| முட்டிவெட்டி மெட்டிகட்டி | முனைந்துவாருங்கள் |

அரவான்சொல்-தரு.

| | |
|---|---|
| அபிமன்னுவுன் ஆண்மைதன்னையும் | அடக்கும்வண்மையாய் |
| அன்னேமுன்னே | உன்னைசொன்னேனடிக்க |

கடோர்க்கஜன்சொல் தரு.

| | |
|---|---|
| உண்மையாய்விபரீதமாய் | வாத்தியிடத்தில்வினைகள்மூட்டியே |
| விரும்பிபிரம்பால்விரய்புத்திரம் | பாரவிஷமும்காட்டியே |



அரவான்சொல் கவி.

தோழமேகமெல்லோரும் சுகமுடன்தீர்த்தமாடி
நாழிகைநேரமாச்சு நலமுள்ளபந்துகொண்டு
ஆழிசூழுலகமெச்சும் ஆட்டம்நாமாடவேண்டும்
வாழியிக்கெங்கையென்று வருகுவீர்ஜலத்தைவிட்டு.

வசனம்,

வாரும் தம்பிமார்களே நாம் ஜலத்தில்விளையாடி ஆயாசம்தீர்ந்தோம சிலநேரம் பந்துவிளையாடி பின்புபோஜனத்துக்கு அரண்மனை சேரலாம்வாரும் தமபிமார்களே,

அரவான்சொல் பந்துவிளையாடும தரு,

| | |
|---|---|
| பந்தடிப்போம்வாரீர் | மகிகூடியாய் |
| பந்தடிப்போமவாரீர் | |
| பந்தெடுத்துமே | கெர்துபாய்ந்துமே கரு |
| மேகமண்டலம் | யேகிவருகிர |
| தாகதெரியுது | வேகமானது (பந்த) |

அரவான்சொல்-தரு,

| | |
|---|---|
| அண்டமளாவிவரும் | உன்பந்தையான் |
| மண்டியிட்டு | யேந்தினேன் |
| கண்டவர்மகிழக் | கடோர்க்கயன்வாங்கியே கரு |
| காட்டியந்திர | மோடியெந்திர |
| போட்டபந்தியம் | மீட்டுக்கொண்டேனே(அண்) |

அபிமன்னன்சொல்-தரு.

| | |
|---|---|
| அர்ச்சுனனுப்பீன்ற | அபிமன்னன் அன்புமனதாகி |
| ஈர்ச்சனமேயென்சமர்த்தை | பாருமென்று கரு |
| சந்திரமண்டலம் | தாவிடயெந்தன் |
| பந்தியமும் | வந்துதென்றிட(அர்) |

அரவான்சொல் கவி.

வேடிக்கைபந்துதன்னால் விளையாடில்ளைக்களித்தோம்
தேடியேமதுயன்னை தியங்கியேதவித்திருப்பார்
நீடியேமனைக்குயேகும நினைந்தயிவ்விதிவார
கோடிசூரியப்பிரகாசமான குரத்தியின்வடிவைப்பாரீர்

வசனம்.

வாரும் தம்பிமார்களே நாமானல்பந்தாவிளையாடி வெகுநேரமாய்விட்டது நமது அன்னையர்கள் போஜனத்துக்குவர யில்லை யென்று தேடிவருந்தப்படுவார்கள் நாம அரண்மனைபோகலாம வாரும்தம்பிமார்களே-ஆ, ஆ, யிதென்ன அதிசயம யிவ்வீதியில் கோடிசூரியப்பிரகாசம்போல வரப்பட்டதை உத்துப்பாருங்கள் தேவரம்பையோ அல்லதுயிரமசித்திட்டியில் அகப்பட்டதோ உத்துப்பாருங்கள்யேதோ வொன்றும்தெரியவில்லை யிதர்க்கென்ன யோசனைசெய்யலாம்தோழர்களே,

அரவான்சொல் தரு.

யென்னவிசித்திரமிதுபார் இந்தகுரத்திதனியொருத்தி
யெண்டிசையிலுமிணையுண்டோ யொருவரில்லை (யென்ன)
கன்னல்வில்மதன்தேவியோ கண்காணமனமநாண
கர்த்தரிடம்பெற்ற உமையவளோ (கன்ன)
செங்கண்மால்தேவிமங்கையோ பிரம்நான்கும்தரித்தோங்கும்
தேவன்பிர்ம்மனிடதேவி கலைமகளோ (செங்)
யெங்கும்நிறைந்தம்பியோ யிளமதியோவெகுமதியோ
ரமபையூர்வசியிலும யேகவடிவுடையாள் (யெங்)
கிட்டிநெருங்கிநாமுமே கிளிமொழியாள்துளிர்விழியாள்
கீர்த்தியவளமுகும பார்த்துமனமகிழ்வோம (கிட்டி)
யெட்டுதிசையுங்கண்டவர் யிவள்சோதிபிரகாதி
யில்லையெவருமென்று சொல்லிமகிழ்ந்திடுவார் (யெட்)
உளரும்பேருமரியோம் உளவாகுமயமாக
உத்தமியிவளிட சித்தமரியநன்றாய் (உளரு)
பாருமயிவள்கழுத்தில் பகலொளிபோல்வெகுஜொலிவாய்
பைந்தொடியாளின்மேல் சந்தேகந்தோற்றுதுபார் (பாரும)

கடோர்கஜன்சொல் கவி.

பார்த்திரோ தமையன்தம்பி பற்பலதோழமாரே
நாற்றிசைவீரரா நகையொளிகுரத்திதன்னை
கோத்திய அன்னையாளின பந்தரப்பதக்கமதன்னை
பூர்த்தியாய்களவுசெய்த பூவையைவிடப்படாதே,

வசனம:

வாருமதமையன் தம்பிமார்களே தோழர்களேயிந்த வீதியில்தேவரம்பைபோல ஒருகுரத்தியானவள்வரும் உல்லாசத்தை பார்த்திர்க



ளா அவள் அணிந்துகொண்டு வரும்ஆபரணங்களெல்லாமநமது அன்னையர்களுடைய ஆபரணமாயிருக்கின்றதுயெவ்விதத்திலேயோ களவுசெய்துக்கொண்டு வந்தவள்போல் தோன்றுகின்றது யிவளை விடப்படாது யெதிரில்பட்க்குக்கோள் தோழர்களே,

கடோர்க்கஜனுக்கும குரத்திக்கும் தர்க்கம்-தரு.

வாலைக்குரவஞ்சிநீயி உனக்கிந்த
மாலைக் கொடுத்தவராரடி
சோலைக்கிளிபோல்நாரி நடக்கின்றாய்
சமமாய்டுவோமோ சொல்லடி-தரு
தொடுப்போமசரம் விடுப்போமுனை
படுவாய்கெதி அடைவாய்பதி (வாலை)

குரத்திசொல்-தரு.

சின்னம்சிறுவரே கன்னிக்குரத்தியன்
யென்னிடசபத்தில் நிர்க்குரீர்
பொன்னின்பதக்கமுன் அன்னைக்கிதாருவண்டோ
போகவிடாமல் மரிக்குரீர்-சருள்
பூணுமக்கலை நாடாதேகனை
காணுக்கதி யேனோமதி (சின்ன)

கடோர்கஜன்சொல்-தரு.

மந்திரயிந்திரஜாலம் தந்திரம்கற்றவள்
மாயக்குரத்தியோரடி சிந்தைகலங்கிட
தெண்டாயுதத்தினல் சிதரவடிக்குவோம்பாரடி-சரு
செய்யாக்குலை மெய்யாகவே
அய்யமில்லை தையலரை (மந்திரி)

குரத்திசொல்-தரு.

மலையாளம் பொம்மக்கா சகுசொமுண்டி
மாயக்குட்டிசாத்தன் வாருங்கோள்
குலைசெய்வேனென்றனை கூடியடிக்குரார்
கொச்சியமன்வந்து பாருங்கள்-சருள்
கொல்லுங்கள் யெல்லாமென்
சொல்லும்படி நில்லுங்கள் (மலைய)

கடோர்க்கஜன் சொல்-கவி.

யெத்தனைகளைகள் தன்னை யெடுத்துநாம்தொடுத்தபோதும
சத்துமேபயமில்லாமல் தடுத்துமேவசியம்செய்தாள்
உத்தமிபதக்கம்கொண்ட உண்மைகளறியவேண்டும
சித்தமாய்தந்தைமுன்னே நிண்டியேகொண்டுபோவோம்.

வசனம்.

வாருங்கள் தோழர்களே நாம்யெத்தனையோவிதகணைகள்தொடுத்தோம் யிவள்அத்தனைகணைகளையும்வசியம்செய்துவிட்டாள் ஆகையால்யிவள்மேது அன்னைகளுடைய ஆபரணம் யிவளுக்கெப்படிகிடைத்தது அதைக்கண்டறியவேணும யிவளையிழுத்துக்கொண்டு நமதுபெரியதந்தையரிடம் கொண்டுபோய் விசாரணைசெய்வோம் விடாமல்யிழுத்துவாரும்தோழர்களே.

அரவான்சொல்தர்க்கம்-தரு.

இராஜகிருடியிவள் காணையம் தானென்னகேளடா
பூசிதக்கூடையைப் பிடுங்குவோம்
பெரியதந்தைமுன்னே விடுகுவோம்

குரத்திசொல்-தரு.

அடித்துயிழுக்காதீர் செல்வரே யெந்தன்
அண்ணன் தமபிகால்வர் பொல்லாதவர்
குடிக்கியொருபெண் பிறந்தவள்பெண்
கூடையையிழுத்து வருந்தாதீர்

அபிமன்னன்சொல்-தரு.

சிங்கக்குட்டிபோல்தமயன் யிங்கே
சிரிவந்தால் பயப்படுவோமோ
பங்கப்படுத்தியெங்கள் தந்தைமுன்தாயார்
பதக்கத்தைகாக்காமல் விடுவோமோ (சிங்)

குரத்திசொல்-தரு.

பஞ்சவர்கள்நன்றாய் தெரிவேனே-யிந்த
பார்த்திபக் குரத்தியாவேனே
பிஞ்சிதளவேண்டாம் பாலரே-நான்
மெய்பதைசொல்கிறேன் கேளீரே



குரத்திசொல் கொச்சகம்.

தர்மருடன்சபைக்காய் தனயர்களும்
தன்னுதையில் மர்மமெவரியருமென்று
மணிவிசையபூங்குரத்தி பெருமையுள்ள
அல்லியர்க்கும பேரழகுதுரோபதைக்கும்
அருமைகளை நானுரைத்தேவிந்த
ஆரமதை தந்தாரம்மா

வசனம்.

வாரும்பாலர்களே நான்நடந்த விர்த்தாந்தத்தை உண்மையாய் சொல்லுகிறேன் கேளுங்களப்பா உங்கள் அன்னையர்களாகிய துரோபதையார்க்கும அல்லியர்க்கும் குறியுரைத்தேன் அதைப்பத்தி அவாள் கொடுத்த ஆபரணமப்பா பாலர்களே.

கடோர்க்கஜன்சொல்-கவி.

சரிசரியுண்மைசொன்னாய் தையலேகுரமாதேகேள்
அரியரன்அயன்வந்தாலும அகன்றிடாப்பதக்கம்தன்னை
குரிபதுவுரைத்துநீ கைக்கொண்டதென்றுரைத்ததாலே
தெரியவேயெங்களுக்கு செப்புவாய்குரிகள்பார்ப்போம்.

வசனம்.

வாரும்குரமாதே அரியரன் அயன்மால் யிவர்கள்வந்து கேட்டபோதும்கொடாத யெங்கள் அன்னையர்களின் பதக்கத்தையும் ஆரங்களையும் நீ குரிசொல்லி பெற்றதை யோசித்தால் குரியில்கெட்டிக்காரதனமிருப்பதாக தெரியவருகிறது அந்தக்குரியின் நிசத்தையத்தை நாங்கள் தெரிவதாய் யெங்களனைவருக்கும குரிகளைச்சொல்லிவாரும் குரமாதே.

குரத்திசொல் தரு.

குரிகளதுயுங்களுக்கு சொல்லலாமோடா
கூடையைபிடித்திழுத்து கோலமசெய்தீரோ

கடோர்க்கஜன்சொல் தரு.

கோலம்செய்தோமென்றுகுரி கூறாவிட்டாலே
கூடையுடன்தந்தையிடம் கொண்டுசேர்ப்போமே.

குரத்திசொல் தரு.

கொண்டுவிடுவோமென்றுரைத்த குமர்களைபாலரே
குரியுரைத்தால்யெந்தனுக்கு கொடுப்பதென்னடா.

பப்ரவாகன்சொல்-தரு.

யேதுதருவேனென்றாய் யிளக்குரத்தியே
யின்பழுஷணக்களை யின்றிதிவோமே,

கடோர்க்கஜன்சொல்-கவி.

வஞ்சிபூங்குரத்தி வருத்திடுப்குறிகள்தன்னில
கொஞ்சமும்பிழையிருந்தால் குறகூடைகொடுக்கமாட்டோம்.

குரத்திசொல் கவி.

வஞ்சகமில்லையப்பா வார்த்தையென்குறிகப்பாது
பிஞ்சகன்யுமையாள்மட்டும பேர்பெற்றகுரத்திநானே

குரத்திசொல்-குறி-தரு,

ஐங்கரன்வல்லபை அறுமுகவன்வள்ளி
அரனுடன் அம்பிகையும் வா-வா-வா
செங்கைமாலுடன் மங்கைலக்ஷிமி.
திரமாய்கூடையில் வந்தருள்வாய்
மாரியும்காத்தான் போத்துவராயணம்
மஞ்சளழகிகாரி வந்தருள்வாய்
சூரியர்சந்திரர் கழல்காட்டேரி
தொங்கும்சடைமுடியும் வந்தருள்வாய்
அய்யன்பிடாரியும் கார்க்கைகாளி
ஆனந்தியும் வரபாடைவந்தருளும்
தையலேழுகன்னியும் தண்டியக்காரன்
ரஞ்சிகொஞ்சிமலையாள வஞ்சியுட-வா-வா-வா
வீரன்மயான ருத்திரியுடனே
வேகமாய்கூடையில் வந்தமரும்
தாரமில்லாமலே தோகைகூடையில்
சொர்ப்பெருங்குறியுரைக்க அர்ப்புதமதா

குரத்திசொல் கவி.

பஞ்சவப்புதல்வரான பாலரேசொல்லக்கேளீர்
அஞ்சலாய்தேவரெல்லாம அமர்ந்தனர்கூடைதன்னில்
ரஞ்சிதக்குறியுரைப்பேன் நானிலப்புகழ்வதாக
அஞ்சனம்கழலக்கூடை சொல்லுவேன்குறிதுடயபி.



வசனம்.

வாரும் பஞ்சபாண்டவர்களின்பாலரே யென்கூடையில் சகலதேவர்களும நிறையக் கூடைசுழல உங்களுக்கு குறிசொல்லிவருகிறேன் கேளுங்களப்பா பாலரே.

குரத்திசொல் தரு.

மதிமுகவதனமுள்ள மைந்தன்மார்களா
மலர்முகத்தைகாட்டுமப்பா பாலர்களா

கடோர்க்கஜன்சொல்-தரு.

அதிசயமாயிங்குவந்த அருங்குரத்தியேயெங்கள்
அன்னைதந்தைபட்டணம்பேர் அறைகுவாய்மாதே

குரத்திசொல் தரு.

தருமருக்கிளையமன்னன் தனஞ்செயவிட
தனையர்நீங்கள்காலவரென்று சாற்றும்குறிகள்

அரவான்சொல் தரு.

மருபடியுமிருவர்யாவர் மைந்தராரடி
மலையாளபூங்குரத்தி மகிழ்ந்தருளுவாய்

குரத்திசொல் தரு.

அதிகபெலபீமன்பிள்ளை அவர்களிருவரும்
ஐவருக்கிளையசகாதேவன் அருந்தபங்களே

அபிமன்னன்சொல் தரு.

நதியுடன்யுரைத்ததுவும் சரியடிமானே
தனையரிடநாமதேயம் சாதிப்பாய்பார்ப்போம்

குரத்திசொல் தரு.

அரவான்தொந்திகடோர்க்கஜன் அபிமன்னனுடனும்
ஆண்மையப்ரவாகன் புலந்திரனும்ல்லவோ

பப்பிரவாகனன்சொல் தரு.

திரமையம்மாபூங்குரத்தி சொல்லும்குறியெலாம்
ஜெகத்திலாரதன்மருத்துவத்தை தெரிவாரில்லையே

குரத்திசொல் கவி.

குறியின்னமுங்களுக்கு கூறவோமைந்தன்மாரே
சரிதானேயுரைத்ததெல்லாம தப்புகளுண்டோசொல்வீர்
பிரியமாய்செய்தகுற்றம் பிள்ளைகளெனப்பொருத்தேன்
பெரிதப்பியிதைபோலின்னம் னிந்தைகள்செய்யப்போரீர்.

வசனம்.

வாருமப்பா பாலர்களே மின்னங்குறிகள்சொல்லவோ நான்மின்ன ரையிப்சொன்னது சரிதானோ அல்லது பிழையுண்டோ சொல்வீர்கள் யென்னைசெய்த கோலங்களைப்போல் மின்னைவெளியில் யாவரையும் செய்யாதீர்கள் நான் பாலர்களென்று பொறுத்தேன் போகவிடைதா ருபாலர்களே.

கடோர்க்கஜன்சொல் ஐம்பை.

ஆரமதுதிருடியென்று ஆச்சியென்னைஅடித்ததைநோம்
கோமெல்லாமிதிலம்மா நீயுமிந்தபிழைபொறுப்பாய்.

குறத்திசொல் ஐம்பை.

மடிபிடித்துயிழுத்ததும் வைதுயென்னைஅடித்ததும்
வடிவுடையமைந்தருங்கள் வார்த்தையெனக்கமிர்தமப்பா

ஆரவான்சொல் ஐம்பை.

சரப்பளியும்தாழ்வடமும் சகலபணிதனையகற்றி
அருள்பெருமுன்பாதமலைத்து அன்புடனே துதிபுரிந்தோம்

குறத்திசொல் ஐம்பை.

அன்புடையமைந்தர்களா அவரவர்களாரமதை
இன்பமுடனாளளித்தேன் பேருவீர்மாளிகைக்கு

அபிமன்யன்சொல் ஐம்பை.

அன்னையர்க்குசமமான அருளைகுறபேதையரே
மின்னொளியாள்தாய்மனைக்கு விருப்பியெங்கள்பின்வருவாய்

குறத்திசொல்ஐம்பை.

மின்னொளியினாண்மனைக்கு வேண்டியெனையழைக்கும்வீரம்
இன்னதென்றெனக்குரைப்பீர் யின்பமுடன்வாரனப்பா;

புலந்திரன்சொல் ஐம்பை.

மாதரசியன்னையர்க்கு மனஸ்தாபக்குறைகளுண்டு
நீதியுன்குறிகளொன்று நீயுரைக்கவேணுமம்மா.

குறத்திசொல் ஐம்பை.

குறிகளதுவேண்டுமானல் கொம்பனையாளிடம்சென்று
மருமொழிகள்கொண்டுவந்தால்வர ஞாயமுண்டு



குறத்திசொல் கவி.

நீதிமின்னொளிமனைக்கு நீவாவென்றழைத்தீர்பாலா
வீதியில்குறங்கள்பாடி விரும்பியேவருவதற்குள்
ஓதுமென்சேதிதன்னை யுங்கள்தாயரியவேண்டி
கோதிலாதீனையம்மாரே கொம்பனையிடத்திலசெல்வீர்,

வசனம்,

வாரும் பாலர்களா வென்வழக்கப்படி நான் வந்தது யிப்பட்டணை மரிவதாய் வீதிகளில் குறம்பாடி வருவேன் நீங்கள் உங்கள் சிறியதாயி டம சேதியைதெரிவித்து பதில்கொண்டுவாரும் பாலர்களே.

கடோர்க்கஜன்சொல்கவி,

அன்னைமின்னொளியேயெங்கள் அம்மணிசருணமம்மா
உன்னிதபுது மையொன்று வோதவுன்னிடத்தில்வந்தோம்
பொன்னுலகத்துப்பெண்ணே பூங்குறமாதொருத்தி
கன்னியும்குறிபோல்சொல்வார் கடலுலகில்லையம்மா,

வசனம்.

வாரும்யெனது அருமைத்தாயே ஆரேவொருகுறமாதுபொன் னுலகமாகிய தேவலோகத்தில் வசிக்கப்பட்டவளாம் குறிசொல்வதில் அவளைப்போல் குறிசொல்பவர் யாவரையுமகண்டதில்லையம்மாதாயே

மினனொளிசொல் தரு தர்க்கம்.

அப்பாகுமாரவர்களே அருளைக்குறத்தியிட
பெருமையுரைக்க வந்ததை (அப்பா)
செப்புங்குறத்தியிட திரமெப்படியறிந்தீர்-கரு,
செல்வர்களேயுலகி லில்லையெனப்புகலும
வல்லகுறிகளதை சொல்வீர்மனமகிழ்ந்து (அப்பா)

கடோர்க்கஜன்சொல் தரு.

அன்னை துரோபதையல்லியும அவளெப்புகுறிக்குமெச்சி
செமபொன்பதக்கம் தந்தார் (அன்னை)
கன்னிகுறத்திதன்னை கண்டுதுதித்துநாங்கள்-கரு
கழுத்தலணிந்தமணி யிழைத்தபதக்கமதால்
யிழுத்து அடித்தவளை செழித்தகுறியரிந்தோம் (அன்)

மின்னொளிசொல்தரு.

குறத்திதனையடித்துமே குறிகளரிந்தோமென்று
பரிவாயுரைக்கவந்தீர் குறத்தி

உரைத்தகுறிகளென்ன ஒருவிசெந்தறைக்கு எரு
உத்தமிபெருமையிவள் சித்தமிரிந்தவிதம்
புத்திரமணிகளே நத்தியுரைத்திடுவீர் (குற)

## அரவான்சொல் தரு.

தந்தைதாய்வர்க்கமுதலாய் சகலமுறைகளெல்லாம்
புகலமனமகிழ்ந்தோம் தந்தை
சிந்தையில்நினைந்ததெல்லாம் தெளிவாயறிந்தவள்போல்
செப்புங்குறிகள்வெகு அற்புதமம்மா
யிப்புவிதனில்வினை செப்பிடலாமோ (தந்தை)

## மின்னொளி சொல் கொச்சகம்.

அருமையுள்ளவென்பாலகரே அருங்குறத்திதன்குறிகள்
பெருமையுடனாம்கேட்டால் யிந்தபேருலகந்தானகைக்கும்
இருதயத்தின்சிரைநீக்கி யெக்காலம்செல்லுமென்று
ஒருகுறிகள்நாம்கேட்போம் உத்தமியைதானழைப்பீர்

## வசனம்.

வாருமென் பாலர்களே நான்பெருமையாக குறிகேட்டாலிந்த உலகம் நகைக்குமல்லவா யிருந்தாலுமிருக்கட்டும் நமதுசிரைநீங்கிவாழுமெக்காலம் செல்லுமென்று ஒருகுறிகேட்போம் அக்குறத்தியை அழைத்துவாரும் பாலர்களே.

## குறத்திசொல் கவி.

மைந்தரின்சவுரியங்கள் மங்கையின்மனங்களித்து
அந்தமாம்வீதிவிட்டு அகித்தமின்னொளியின்வீதி
சிந்தையுமனமகிழ்ந்து செப்பெருமகூடையேந்தி
விந்தையாய்குறங்கள்பாடி மெல்லியும்நடக்கின்றாளே.

## வசனம்.

இந்தப்பிரகாரம் குறத்தியானவள் பிள்ளைகளின்சவுரியங்களைப்பார்த்து மனமகிழ்ந்து அவ்வீதியைவிட்டு மின்னொளியாள்வீதியில்குறம் பாடிவருகிறவிதங்காண்க.

## குறத்திசொல்தரு-குறம்.

மின்னொளிபாள்வீதிதேடி மகிழ்வியுடன்
விசையக் குறத்திவாறாள்
வேங்கைநகர்நகிகொயபு விச்சளியின்பிச்சுகளும்



நாங்காவிஷமருந்து சஞ்சீவிமூலிகையும்-பித்தப்
பூங்குறத்திகைமருந்து ஓ ஆச்சியரே
பூவையர்கள் கொள்ளவீரோ (மின்ன)

தெய்வக்குறத்தியைப்போல் மிகத்தெளிவாய்குறியுரைப்பேன்
சேயதில்லாமங்கையர்க்கு செய்தகுளிசமுண்டு
மாயமானசொக்குப்பொடி மாப்பிள்ளை வசியங்களும்
மோசமுள்ளமாதர்களே ஆச்சியரே
நீங்களிதை கொள்வீர்களோ (தெய்வக்)

மான்கலோசனம்கோரோசனம் ஐயம்மையாரே
மயிலெண்ணை தயிலமுண்டு
மைந்தருக்குமாந்தயெண்ணை மார்சிலந்திபச்சிலைகள்
செந்தேள்செய்யான்கடிக்கு திருமருந்துமுண்டு
யிந்தகுறத்தியிட அவிழ்தவகை
யெல்லோரும் கொள்வீர்களே (மான்க)

வாறாதபெண்களெல்லாம் புருஷருடன்
மருவும்வசியம் செய்வேன்
மஞ்சளோதிதந்திடுவேன் மன்னவர்மயங்கிடவே
ஐந்துயெண்ணைதான்கூட்டி அரிவையர்க்குசாந்திசெய்வேன்
மிஞ்சியென்மருந்துவகை மின்னொளியின்வீதிதனில்
கொள்ளவீரோ (வாறாத)

## கடோர்க்கஜன்சொல்-கவி.

தம்பிகாள்தோழமாரே சந்திரனொளிபோல்வார
சிங்காரக்குறத்தியைநாம் தேடியேயழைத்துக்கொண்டு
அங்கமுமகிழ்ந்துநாமும் அரசிமின்னொளியிடத்தில
இங்கிதசேதிதன்னை யியம்புவோம்வருகுவீரே.

## பிள்ளைகள்சொல்-கவி.

குமாரேநாங்கள்சொன்ன குறிகேட்டுமனமகிழ்ந்தோம்
விரைவுடன்மாரேனென்றாய் வீதியைசுற்றிகொண்டு
வரவுன்னைகண்டுநாங்கள் மட்டில்லாமகிழ்வியானோம்
சரசரென்றெங்கள்பின்னே சல்தியாய்நடந்துவாரும்.

வசனம.

வாரும்குறமாதே நாங்கள்சொன்ன யெங்கள்தாயார்மின்னொளியம்மாள், அரண்மனையிதுதான் உன்னையிட்டுவரும்படிசொன்னாள் நடந்துவாரும்குறமாதே.

கடோர்க்கஜன்சொல்-தரு.

வாருமயிலாளக்குறமாதே    ஒருமாதே
யெங்கள்மாதாவிடமுன்பாக    வருவாய்
இப்போது    இப்போது (வாரு)

குறத்திசொல்-தரு.

அரசருடஅரண்மனையாகுமே    அப்பாயாகுமே
பூங்குறத்தியுள்நுழைந்தால்    யென்னசெதிகேருமோ
அப்பாசேருமோ    (அரசருட)

அரவான்சொல்-தரு.

மன்னவரொருவரிங்கே    யில்லையே-யிங்கேயில்லையே
மனமதுமயங்கவேண்டாம    வருகுவாய்
குறவெல்லியே    குறவெல்லியே (மன்ன)

குறத்திசொல்-தரு.

மாளிகையைபார்க்கபயமாகுதே    பயமாகுதே-உங்கள்
மருமக்களரிபேசப்பா    யென்மனமது
வேகுதேயென்மனம    வேகுதே

கடோர்க்கஜன்சொல்-கவி.

கானகமானேயொன்றும் கவலைகள்நினைக்கவேண்டாம்
தானெங்கள்தாயாரன்றி தடமதிலொருவரில்லை
மானினைதரித்தயீசன் மலரடிசாக்ஷியாக
நானுமுனக்கொன்றிலை உளமதுமகிழ்ந்துவாராய்.

வசனம.

வாருமகுறமாதே யெங்கள்மாதாவின்அரண்மனையில ஒருவருமிடையாது சந்தேகமவேண்டாம் சங்கையில்லாமல்வாரும குறமாதே.

குறத்திசொல் கவி.

அச்சமின்றிஅரண்மனைக்குள் யேகவென்றால்
அதிகபயமாகுதப்பா மைந்தன்மாரே
இச்சையுடன்குறமபாடி வருகயிங்கே
யென்னசெதிசேருமோ அறியேனப்போ



கொச்சியம்மைகுமரேசர் வள்ளியம்மை
குறத்தியர்க்குதுணையிருந்து காக்கவேணும்
லச்சைசெய்துவெனையழைக்கும் மைந்தன்மாரே
நானுமுங்கள்மனைக்குவர துணிந்திட்டேனே.

குறத்திசொல் தரு தர்க்கம்,

சந்தேகமானதொரு    சகுனங்கள்சொல்லுதப்பா
தனையரேவரமாட்டேன்    சாதனையாகவே சோதனையாருடா
அந்தமுள்ளயரசி    ஆளன்வருவாரென்று (சரு)
ஆசையாய்கெவுளிகள்    ஓசையாய்சொல்லுது
நேசமாய்வந்திட    மோசமதாமோ (சந்தே)

கடோர்க்கஜன்சொல் தரு,

அரசரொருவரிந்த    அரண்மனைவாரதில்லை
அன்னமேநீவருவாய்    அச்சமில்லாமலேயிசையதாகவே
வரிசையாயுள்நுழைந்து    வருவாய்மனமகிழ்ந்து சருள்
வந்திடயிங்கொரு    குந்தகமேநீடா
அந்தமிருக்க    சுந்திரமாதே (அரச)

குறத்திசொல் தரு.

வாசர்ப்படிகடந்துவந்தேன்    நான்பின்தொடர்ந்து
வழ்ந்தகமொன்றுமறியேன்    வச்சிரமணியணிபச்சிளம்பாலரே
மிகமொளியைக்காண    யென்விழியதுகூசுதப்பா சரு
விசித்திரமுள    வச்சிரமழுத்திய
உச்சிதஅரண்மனை    கச்சடர்வீசுதே (வாசர்)

அரவான்சொல் தரு,

கட்டிலக்குறமாதே    கவலைமிகவையாதே
கடுகியெங்கள்பின்    வருவாய்
கண்டினை அன்னையும்    கொண்டுபுகழுவாள் (கடுகி)
யெட்டுகட்டுங்கடந்தால்    யெங்கள்தாயைக்காணலாம-சரு
பேசிடவேண்டாம்    பூங்குறமானே
நாங்களிருக்கையில்    தேங்கிடலாமோ (கட்டி)

குறத்திசொல்-தரு.

சொர்ணமயமதாக    சூரியன்போல்தோற்றுதப்பா
சொல்லுவீர்மின்னொளிக்கு    தொல்லைவருகுமெனசொல்லு
வல்லகுறத்தியென    மன்னவரிங்குவருவான்
மின்னேரம்பெண்ணைத்தேடி    வாருங்கள்பேசுவீர்
யோசனையாய்தனை    வீதியேபோசேல் (சொ)
நீதிபாய்விசிருவீர்

ஆரியமாலை சொல்-தரு.

கோதையைத்தன்னைத்தேடி — குறவனைமருவொணென்று
கூறினேயோமொன்றாய் — குறியாகச்சொன்னீயே
பிரியமாய்மேமருவாய் — கூறியே
மாதாவுன்னைக்காணவும் — வழிதனிலேபார்த்திருப்பாள் கருள்
வந்துமேபேசிவிட்டம — தொந்திடலாகுமோ
சந்தோஷமே — மின்னொளிவஞ்சியே (கோ)

குறத்திசொல்-தரு.

வழிபார்த்துமொன்தனை — வருந்தியாழுகின்றீரே
வையமெங்கள்தமையன் தம்பி — வஞ்சியைத்தேடியே
மிஞ்சியேவருவார் — வையமெங்
பழிபாதகத்திற்கஞ்சா — பாதகபாலர்களாக கரு
பாவமெருப்பிடம — மேவியேகண்டேனே
தேவனைத்தியானமும் — செய்துநான்கொண்டேனே (வழி)

தொங்கிசெட்டிசொல் தரு.

உங்கள்தமையன்தம்பி — எங்கால்வாட்டுமிங்கே
ஒருகுறையில்லாமல் தேடிய அன்னையின் — நீதியைப்பாருமே
மின்னாள்தயரனைத்தனைக்காண — வேண்டியமைமிறுவான்
விருப்பமுடிதன் — அருகினிலேகட்டிட
அருந்தவமிகுமெனை — வருந்திநுதிப்பாள் (உங்க)

கடோர்க்கஜன்சொல்கவி.

மேகநாயகித்தளிர்க மின்னொளிதாயேசெனாய்
கோவையாளகுறத்திதன்னை கருகருடனமுழுத்துவைத்தோம
ஆகமிச்சுருதிமிக்க அரிந்தகுறத்தியாரும
பாகமாயிவளிடத்தில் பலதுரிகேட்கலாமோ.

மின்னொளிசொல் கவி

உமையாபார்வதியே உலகெலாமதிக்கவந்த
விமையவர்க்கதிபானா மிக்கின்றேத்திமாரே
அமையுறுஆறுடன்கள் அருமுறியுரைக்குமாதே
சமயமின்வாசனத்தில் சாந்திபொருந்துகுறத்தி.

மின்னொளிசொல் வசனம்.

வாருமம்மைபார்வதியைப்போலும் வடிவுடைத்த குறமாதே
மிக்கஆசனத்தில் வந்தமருகுறமாதே.

கடோர்க்கஜன்சொல் வசனம்.

வாருமம்மாள்நாயே வாசகஞ்சொல்லவிருக்கிறாய்.



மின்னொளிசொல் வசனம்.

அப்படியேபோய்வாரும் பாலர்களே.



மின்னொளிக்கும் குறத்திக்குந்தர்க்கம்-தரு.

ஆசனத்திலிருக்க — அழகோகுறத்தியர்க்கு
அருளைவைத்தனையமர்வேன் — ஆச்சியரே
நேசமுடனிருந்தால் — தோஷமில்லையுனக்கு
நிகழ்ந்தமர்வேன் தனையில் — ஆச்சியரே

மின்னொளிசொல் தரு.

நிகழ்த்தனையமர — நீயோகுறமாதே
நேசமாய்வட்டமணையே — யமர்வாய்
புகழ்தர்க்கரிதான — பொற்கொடியென்தாயிமாரே
பூவைக்குவட்டமணை — தானிவீர்

குறத்திசொல் தரு.

வட்டமணையிலுந்தன் — வாக்குதன்னிடாயல்
வஞ்சியமர்ந்தனமா — மின்னொளியே
மிட்டமுகுறத்தமணை — யென்னைத்தலையாதென்று
மிளங்குறத்தியமர்ந்தேன் — ஆச்சியரே

மின்னொளிசொல்-தரு.

இவ்வகுறத்தியேயுந்தன் — மிருட்பிடமுயின்னதென்று
பொந்தனைக்குரைக்கவேணும் — குறமாதே
காசகையிலலாமல்வந்த — கட்டுவக்குறமாதே
கன்னியரியச்சொல்வாய் — யிப்போதே

குறத்திசொல்-தரு.

பெண்டிசையும்தான்புகழும் — மிளங்கொடியேமின்னொளியே
அண்டபெண்டவகண்டமுமே — பாவும்மென்காடுதானே

இந்திரன்பதிகளுடன் — யீசன்மேவுங்கைலையும்
கந்தரப்புலோகமது — தோகையெந்தன்நாடுதானே
கொச்சிகுடகுமலை — கொங்குவங்காளமுடன்
மச்சமராட்டியமது — மலைகளெந்தன்னதுதானே
யெமராஜனுடதென்றிசையும் — யீரேழுபுவனமும்
அனையயுறுவர்வசிக்கும் — யாவுமெந்நாடுதானே

மின்னொளிசொல் கவி.

மானகர்வளப்பமெல்லாம் மங்கையேயுரைத்ததாலும்
ஆனந்தமகிழ்வடைந்தேன் அருங்கிளிவதனவஞ்சி
தானுந்தனாமதேயம் தையல்யான்மனமகிழ்ந்து
கானகமானேநீயும் கழறுவாயறியத்தானே

வசனம்.

வாரும் குறமாதே தேசங்கள்யாவும் நன்னதென்று சொல்லுகிற மாதே உன்னாமதேயமும் யான்தெரியச்சொல்லுங்குறமாதே,

குறத்திசொல் தரு.

திரிபுரதகனனுக்கும் — தேவியுமைபார்வதிக்கும்
தெளிவாய்குறியுரைக்கும் — ஐயம்மணி
தெய்வக்குறத்தியம்மே

கரியமாலச்சுதர்க்கும — கட்டழகிலக்ஷ்மிக்கும்
கைக்குறிகள்பார்த்துரைக்கும் — ஐயம்மணி
காண்டீபக்குறத்தியம்மே

பாலசுப்ரமண்யருக்கும் — பாவைகுறவள்ளியர்க்கும்
பண்பாய்குறியுரைக்கும் — ஐயம்மணி
பார்த்திபக்குறத்தியம்மே

வேலவர்க்குதான்மூத்த — விக்கினர்வல்லபைக்கும்
வேணக்குறியுரைக்கும் — ஐயம்மணி
விசையக்குறத்தியம்மே

தேவயிந்திரனவர் — தேவியிந்திராணியர்க்கும்
தெளிவாய்க்குறியுரைக்கும் — ஐயம்மணி
தேர்விஜயக்குறத்தியம்மே,

தாவிமுனிவர்சித்தர் — சகலதேவருக்கெல்லாம்
சாற்றிகுறியுரைக்கும் — ஐயம்மணி
தனஞ்செயக்குறத்தியம்மே



ஆவலுடன்பிர்ம்மனுக்கும் — அருவையாள்சரஸ்வதிக்கும்
அன்புகுறியுரைக்கும். — ஐயம்மணி
ஆணழகுகுறத்தியம்மே

சத்தகடலுள்ளவர்க்கும். — வித்தகர்முனிவருக்கும்
சாற்றும்குறியுரைக்கும் — ஐயம்மணி
தனஞ்செயக்குறத்தியம்மே

பித்தலத்தில்வாழுகின்ற — வித்தகக்குறத்தியல்ல
விக்கிரமகுறவனீன்ற — ஐயம்மணி
விளவிஜயக்குறத்தியம்மா,

மின்னொளிசொல் கவி.

நாலிலகும் பாருலகம் புகழ்பெற்றோர்க்கும்
நயமிதேதெய்வகுற நளினமாதே
பானுகதிரொளியான பதக்கமது
பெவர்தந்தார் குறத்தனக்கு
மாணிலமாய்விலைமதிக்கும் வச்ரக்கடை
வந்தவழியேந்தனக்கு விபரமாக
தேனிலவும்பூங்குறத்தி யறியநன்றாய்
செப்புமனமகிழ்ந்து நீயும்யுரைசெய்வாயே

குறத்திசொல் கவி.

விற்பொருதும்விழியான விஜயன்தேவி
மெல்லியவள்துரோபதைக்கும் அல்லியர்க்கும்
அர்ப்புதமாய்குறியுரைத்தேன் அவர்கள்மெச்சி
அழகுபெருஆபரண மளித்தாரம்மா
கர்ப்பகத்தின்பிதழ்சூழும் யீசனார்க்கும்
கனமுடையகுறியுரைத்து கடைபெற்றேன்
சொர்ப்பமல்ல குறிக்கடைமகிமைதன்னை
சோதிமரைதேவர்களும் சொல்லப்போமோ,

மின்னொளிக்கும் குறத்திக்கும் தர்க்கம் தரு ஜம்பை,

அல்லியர்க்கும்துரோபதைக்கும் — அன்புகுறிசொன்னேனென்றாய்
அழகுவன்வடிவைக்கண்டோர் — அடித்துவழிமறிப்பாரே.

குறத்திசொல்ஜம்பை தரு,

வழிமறிக்கும்காமியர்க்கும் — மதிமயங்கவசியமுண்டு
பழுதொருவர்யெனைநினைத்தால் — பட்டிடவேசுட்டெரிப்பேன்

மின்னொளிசொல் ஐம்பை தரு.

பெரிச்சுடரின்வடிவான ... மின்குறத்தியுன்கணவன்
குறிகளறுபுகலவென்று ... கோதையுன்னைவிட்டதென்ன

குறத்திசொல்-ஐம்பை-தரு.

விட்டதென்னவென்றுரைத்தாய் ... மேகனவன்செல்வியரே
யிஷ்டமுள்ளகுறியுரைக்க ... யேர்க்குமடியென்சாமி

மின்னொளிசொல்-கவி.

பொன்னுலகம்பூலோகம் புவனமெங்கும்
பூங்குறத்தியுனக்கிணை யொருவரில்லை
பன்னுமதன்வுன்னழகை கண்டாரானல்
பைங்கிளியாள் ரதிதனையும்வேண்டாரம்மா
யென்புருஷன்விஜயனவர் வுன்னைக்கண்டால்
யிச்சையுள்ளதேவிகள்மேல் யின்பங்கொள்ளார்
கன்னியுன்னை யுன்புருஷன் மருவிடாமல்
காளையவர்விட்டிட்டே மாட்டாரம்மா.

வசனம்.

பொன்னுலகமாகிய தேவலோகம் பூலோகம்வரையில் உன்னைப்போல்வடிவைப்பெற்ற மாதரைக்கண்டிலேன் நீசகலதேசங்களையும் சுத்திகுறிகளுரைத்ததாகவும் பாண்டவாள்வாசம் செய்யும்யின்னாட்டிலும தூரோபதைக்கும் அவ்வேயர்க்கும் குறியுரைத்தாகவும் சொல்லுராய் தேவலோகத்திலுள்ளமன்மதனுனவன் உன்னைக்கண்டால் தன் ரதிதேவியைவிரும்பான் அவ்வளவு வடிவைப்படைத்தவள் பாண்டவாளில் ஒருவராகியயென்னுயகர் அர்ச்சுனமகாராஜன் உன்னைகண்டு சும்மாவிடமாட்டாரு அந்தகாரணம தெரியச்சொல்லடிகுறமாதே.

குறத்திசொல்கவி.

நல்மொழிபுகலவந்தாய் விஜயனாரை
நானவர்தன் நீதிமொழியறிந்திருப்பேன்
சொல்லியதோர் யிந்த்ரபுரி யேகும்போது
துஷ்டகுண ஊர்வசியாள்மோகங்கொள்ள
வல்லவனுமறிருதாயார் யெனத்தகித்து
வஞ்சியினல் பேடியுருவாகினின்றார்
அல்லலுடன் யிவ்வார்த்தை யுரைத்ததாலும்
அம்புவியில்கீர்த்திபெர அழிவாய்யே.



வசனம்.

வாரும்மின்னொளியே அந்தஅர்ச்சுனமகாராஜனை அவ்வளவுகேவலமாக நீசொன்னயல்லவா அவர்யிந்திரபுரியடைந்தகாலம ஊர்வசிகண்டு மோகங்கொண்டவளை பிரியதாயாரென்று பரித்துவிட அதனலேபேடியுருவடைந்தார் அப்பேர்ப்பட்ட விஜயகாரை யென்னைப்பற்றி கேவலமெண்ணங்கொண்டாய் மீறனவாய்மதத்தால் அழும்பானவெண்ணங்கொள்ளாதே மின்னொளியே.

மின்னொளிசொல்-கவி.

கோபமுடன்மனஸ்த்தாபம் படவும்வேண்டாம்
கொம்பனையேகுணமிகுந்த குறமானேகேள்
ரூபமுனக்கிடொருவர் யில்லையென்று
லோகமுரையுரைத்ததன்றி வேறேயில்லை
யொபகமாயெனக்குரிய குறிகளெல்லாம்
கண்மணியேகவலையன்றி சழலவேண்டும்
பாபமுன்மேல்பழிசொல்ல வில்லையானும்
பாவையுனக்குண்டான [illegible].

வசனம்.

வாரும்குறமாதே நான்தகாதவார்த்தையுன்மேல் சொன்னேனென்று யென்மேலில்கோபம்வையாதே உன்ரூபலாவண்யங்களுக்கு உகமையானவார்த்தைசொன்னேனேதவிர வேறொன்றும் மனஸ்த்தாபப்படவேண்டாம் உனக்குண்டாகியப்பருகன் யேதாகிலும்யிருந்தால்சென்றுநின்றான் யெனக்குண்டாகியகுறிகளைச்சொல்லுங்குறமாதே.

குறத்திக்கும் மின்னொளிக்கும் தர்க்கம்-தரு.

கெண்டைவிழிகர்வியான கிளியே ... மின்னொளியே
அண்டர்களைவரவழைக்க ... அதர்க்குடையமுறைகேளடி-கரு
ஆவலுடன்யிளநீர் ... அர்ப்புததேங்காய்
கவனமாய்நரவியின் ... சவியாதாராய் (கெண்)

மின்னொளிசொல்-தரு.

கதலியின்கனிவர்க்கமும் ... கடலையுடன்தேங்காயும்
நவமணிபோலவேணவிதம் ... நானளித்தேன்பாராய்-கரு
நற்குணமாகிய ... கற்பகமலரிதழ்
மைக்குழலேவெகு ... அர்ப்புதமந்தேன் (கதலி)

குறத்திசொல்வசனம்

சரிதான்னீகொடுத்ததெல்லாம் மிக்கக்குறிக்கூடைநிறைய முத்துகள்தருவ ய்மாதே,

மின்னொளிவசனம்,

அப்படியேதந்தேன் குறிகளைசொல்லும்குறமாதே,

குறத்திசொல்-கவி,

யென்மயிலேபிள்ளையார் பிடித்துவைத்தேன்
பிரியமுள்ள அருகும்மலர் சாற்றியாச்சு
வெண்மதிபோல்லொளிக்க முத்துதன்னை
விக்கினர்முன்பரப்பிமேல் கூடைவைத்தேன்
யெண்ணியகனிவர்க்கம கடலையெல்லம்
யின்பமுடன்பலவகைகள் யிளநீரோடு
விண்ணுலகம்தானரிய தூபங்காட்டி
விருப்பமாயபலதேவதையை தியானிப்பேனே,

குறத்திசொல்வசனம்,

கேளு மின்னொளியே பிள்ளையார் பிடித்துவைத்து அருகுதாம் பைபுஷ்பவகைபராக்களையும் சாத்திவைத்த முத்துகளை பரப்பிஅதன்பேரில்யென்குறிக்கூடையையும் வைத்தேன் கனிவர்க்கம் கடலையிளநீரோடு அன்னைநைவேதனம்வைத்து தூபதீபமுமகொடுத்துயென் யிஷ்டதேவதைகளை தியானிக்குறேன் நீயிந்தபிள்ளையார் முன்வந்து உன்மனதிலுள்ளதை நினைத்துக்கொள்ளும் மின்னொளியே,

குறத்திசொல தருகுறி,

| | |
|---|---|
| மின்னொளிக்குநன்மைக்குறி | விஜயக்குறத்திசொல்ல |
| விகினரும்வல்லபையும் | வந்தமரும் |
| அன்னைகுறவள்ளியாரும | ஆறுமுகவேலவரும் |
| அரனுடன்பார்வதியும | வந்தமரும |
| திருமருவும்லக்ஷிமியும் | சிதரனும்வேதமுடன் |
| தேவிகலைமகளும் | வந்தமரும் |
| அருமறைமார்சித்தரொடு | அந்தரவாசிகளும் |
| அருவையேழுகன்னியரும் | வந்தமரும் |
| மன்னுபிடாரிதுர்க்கை | மாரிபிடல்யெல்லைக்காளி |
| மலையாளகொச்சம்மா | வந்தமரும் |



| | |
|---|---|
| மன்னன்மதுரைவீரன் | மாயக்கருப்பண்ணன் |
| மஞ்சளமுகிகளா | வந்தமரும் |
| அஷ்டவசுக்களுடன் | அருணகிர்சந்திரனும் |
| அறகுள்ளசகாத்தானிங்கே | வந்தமரும் |
| இஷ்டமுடையகுறியெனக் | கருள்புரிந்திடவே |
| யெல்லவரும்கூடைதனில் | வந்தமரும |

குறத்திசொல் கவி.

கூடையும்சுழலுதம்மா கொம்பனையாளேபாரய்
வாடைகள்வீசுதிப்போ வானவர்வந்துசேர
நாடையிலவரந்தாப்போலும் சாதிக்குங்குறியைப்பார்த்தால்
ஜாடைகள்யாவுமுன்மேல் சாருதேகுற்றமாதே.

வசனம்.

யேபெண்பாவாய் யென்யிஷ்டதேவதைகள் யெனக்குசாதிக்கும்குறியான்து நாடையிலடித்தாப்போல் குற்றம உன்பேரில்சாருதேயாதே.

மின்னொளிசொல் தரு.

| | |
|---|---|
| குறிகளதயெந்தனக்கு | கூறச்சொன்னாலே |
| குறத்தியேநான்செய்ததெல்லாம் | கொடுமையென்றாயே |

குறத்திசொல் தரு.

| | |
|---|---|
| கொடுமையுன்மேல்சொன்னேனென்று | கோபம்வையாதே |
| கொண்டவனைவைததுண்டோ | கூறடிமாதே |

மின்னொளிசொல் தரு.

| | |
|---|---|
| மாதுகுறவஞ்சியரே | வார்த்தையுண்மைதான் |
| மன்னவரையதுக்காக | வைதேனசொல்லடி |

குறத்திசொல் தரு.

| | |
|---|---|
| சொல்லவேகன்னிவயதுசை | தொடர்ந்துநிற்கையில் |
| கவைதனுன்மேல்மோகங்கொண்டு | தொல்லைசெய்தாரே |

மின்னொளிசொல் தரு.

| | |
|---|---|
| செய்தபிழையாவையுநீ | தெரிந்திருந்துமே |
| தேன்மொழியேயென்மேலபழி | செப்பலாகுமோ |

குறத்திசொல் தரு.

| | |
|---|---|
| செப்புங்கணவன்தன்னைவிட | தெய்வமெங்கடி |
| சிரிவையநீதியோடி | சேயிழையாளே |

மின்னொளிசொல் தரு.

| | |
|---|---|
| ஆளனுக்குஅடங்கியதோர் | அருவையானலும் |
| ஆண்மையினல்பூசைதன்னை | அழிக்கநீதியா |

குறத்திசொல் தரு

அழிவுகாலமாகியேயும் — ஆளென் தன்னையே
அவமதிப்பாய்ப்பேசினதால் — அருமைக்காரும்

மின்னொளிசொல் கவி.

கானகக்குறத்தியாரே கண்டதுகண்டபடியன்றோ
ஞானமாய்க்குறிகளைப்பேசுக நவின்ற தமிழ்போலப் பார
தானென்மேல்கிருபைசெய்து தனஞ்செயர்வருகுவாரோ
ஊனமில்லாமலென்றும் யொருகுறியுரைசெய்வாயே.

வசனம்.

வாரும் கானகக்குறமாதே நீ சொன்னதெல்லாம் சரிதான் யிப்ப
வும்அப்படி கோபமாய் சென்ற தனஞ்செயமகாராஜர் அந்த கோபந்த
ணிந்து யெக்காலத்தில்யென்னிடம் அவர்வருவார் அதைசொல்லடி
குறமாதே.

குறத்திக்கும்மின்னொளிக்கும் தர்க்கம்.

வாய்மதத்தால்வைததாக — வருத்தமுடனேபோனமன்னன்
வணையுள்ளஉன்னைக்கு ஓயம்மணி — வருங்குறிகள்புகலையடி.

மின்னொளிசொல் தரு

உண்மையாய்வருவாரென்றே — ஓதும்குறப்பேதையே
உத்தமியெத்தனைநாள்செல்லும் — ஒளியாமல்சொல்லுமமா

குறத்திசொல் தரு.

அய்மணியின்றுன்கணவன் — ஆவலுடனுன்னைசேர்ந்து
அருமசுகங்கள்தருவாரென்று ஓயம்மணி. — அன்புகுறிசாற்றுதடி.

மின்னொளிசொல் தரு.

சாற்றினையென்னன்புடைய — தனஞ்செயரின்விடங்கால்
சம்பிரமுடன்கேட்டபதெல்லாம் — தடையின்றிதாரேனமா

குறத்திசொல் தரு

அம்மையுனைவிஜயன்சேர்ந்து — ஆசையதுதீர்ந்தபோது
அன்புடன்பிரியமதை ஓயம்மணி — அளித்துக்களித்திடுவாய்

மின்னொளிசொல் தரு

களிப்படைவாயென்றவுடன் — காண்டீபன்மேல்மையலாகி
காமன்மிகு மையலிப்போ — யென்கண்மலர்சோருதடி.

குறத்திசொல் தரு

குறத்தியிடகுறிகளுடன் — கொய்மைகளையசெய்கரத்தால்
கூரகங்கள்தாம்பறிய-ஓயம்மணி — கூடிமகிழ்ந்திடுவார்

மின்னொளிசொல் தரு.

கழித்திடுவாயென்றுயெனை — தோகைமயலாகச்செய்தாய்
தொலையால்விரகமது குறத்தியாரே — சொல்லவசமல்லடி.



குறத்திசொல் கவி.

வடிவமுடைசீர்குலைந்து வஞ்சினியிருப்பதாலும்
கொடிபெரும்விஜயன்வந்தால் கினிமொழியுன்னைவேண்டார்
நெடியஅப்பியாசங்கள்ஸ்த்தாலம நேர்த்தியாய்செய்துமீண்டு
கருதியேயணிகள்பூண்டால் காதலும்தீர்வாயென்னேன்.

வசனம்.

வாரும்மின்னொளியே நீசீர்குலைந்து வேஷமாயிருப்பதால் உன்
னைஉன்நாயகன்வேண்டார் அதையென்னுடைய மந்திரவசத்தால்வர
வழைப்பேன் நீ நான் சொன்னபடி அப்பியாசங்களைசெய்து மஞ்சள்நீ
ராடியணிந்து ஆபரணங்களைத்தரிப்பாயானால் அவரைநான்வரவழை
க்குறேன்மாதே,

மின்னொளிசொல் கவி.

சொன்னசொல்சரியேயானாலும் சுந்தரன்காணச்செய்ய
மன்னனைப்பிரிந்தாளாய் மயிர்முடியவிழ்த்ததில்லை
உணவிதக்கலையுடுத்தி ஒளிமிகுபணிகள்பூண்டால்
பின்னமாய்ஸ்திரிகள்கூடி பேதயர்நகைப்பாரம்மா,

வசனம்.

வாரும்குறமாதேயென்னுடையமன்னனைபிரிந்தநாளாகயென்கூ
ந்தலை யவிழ்த்ததில்லை சரியானதுகிலணிந்து ஆபரணங்களையணிந்த
துமில்லை யிப்போநான் அதையெல்லாம் விரும்பினால் யென்னைப்போ
லொத்தமாதர்கள் நகைப்பாரடிகுறமாதே,

குறத்திக்கும்-மின்னொளிக்கும்-தர்க்கம்-தரு.

பார்த்தோர்நகைப்பாரென்று பாவையே — பருமலசனம்கன்றே வாடாதே பாவையே
பார்த்தனுடையபார்த்தனும்வருவார் — பூஷணங்களணிந்து கரு
பூவைபேஸ்நானஞ்செய்து — கஸ்தூரிகள்வீச
பூசியகளப வாசமலரணி — கூடிடவேண்டாய (பார்)

மின்னொளிசொல் தரு.

கூசாமல்ஸ்நானஞ்செய்து — குறத்தியருள்படிக்கே
கோதையென் — தாதியரே
குணமுள்ள கயிலமும் — மணமுருவாசமும் (கோதை)
பேதையென்கூந்தல்தனை — பிரிந்துயிர்வருத்து-கரு
பேரொளியாகிய — கார்குழலானவள்
வீரியமன்னனும் — வாரானைசொல்வேரா(கூசா)

குறத்திசொல் தரு.

தெய்வக்குறத்திகையால் செய்தான் அப்பியங்கஸ்நானம்
நிருமுன் பிடையதுவே
சித்திரவிஜயனும் சத்தியேயவர்வருவார் நீரமுன்
கூறுந்தோழிகள்கையால் கோதைதேஸ்நானஞ்செய்தால்
குற்றமிகஉண்டோடி உத்தமியேமானே
கைத்தலம்பட்டிட பெற்றிடும்பெண்மைகள்-(தெ)

மின்னொளிசொல் தரு.

ஜாதிக்குறத்தியாயும் சதுமித்திரியபெண்களிட
தார்குழல் தொட்டாலோ
சாதனைசெய்குறாய் ஓதடியேயும் (தார்)
சார்வாதம்செய்துயென்மேல் தடுத்துவார்த்தைபுகன்றாய்
ஜாதிகள்கையினால் பேதையுமஸ்நானம்
நீதியாய்செய்குவேன் வேதனைவேண்டாம் (ஜாதி)

குறத்திசொல்-கந்தார்த்தம்.

மேகத்துக்கதிபனின்மின்னொளியாளேகேளாய்
தோகையேயுனைக்குறித்து தொடக்கூடாதென்றுரைத்தாய்
போகமும்உனக்களிக்கும புருஷனின்னைக்குவார
ஆகமும்மகிழ்ந்துகூட.

குறத்திசொல்-தரு,

அரிகுமாரனேடி அருமைவயே உன்புருஷன்உன்னிடம்
பரிவிவருமபடி
வருகும்சேதியை தெரிகுரேன்போடி (மரு)
எரிமழுவோதிய சசன்மாலபன்தேவர் தரு
யெடுத்துச்சொல்மொழி தடுத்திடாதடி
பிடித்தசபதமென் நடத்தையாதடி (அரி)

மின்னொளிசொல் கந்தார்த்தம்,

கூர்விழிபொரிபரக்க கோபமீறி
கூடைதனையெடுத்துமே யிடுப்பில்வைத்து
போர்விஜயன்வருகிரதை பார்ப்போமென்று
பூங்குறத்திசியெழுந்து போகவேண்டாம்
சீர்பெறவேயெந்தனுக்கு திருமஞ்சனமாட்டிவைப்பாய்
சார்வாதமூனக் கேளம்மா,



மின்னொளி சொல்-தரு.

தையலேவாரும் சம்பிரமாயெனக்கின்பமாகிய
அன்புடன்யொரு தெம்புசொல்லுமே கின்பமா
மெய்யதாகிருர் ஐயமில்லாதெனக் கபிஷேகஞ்செய்குவாய்-அரு
அந்தனமெனவும ரஞ்சிதமொழி
வஞ்சிசொர்ப்படி மிஞ்சிடாதிலேன் (தைய)

மின்னொளிசொல்-கவி.

செல்வதாதியரேயெந்தன் சேமிளையமாதரேகேளீர்
வல்லதோர்குறத்தியாரின் வாக்கதுபிசகிடாமல்
நல்லசம்பங்கியெண்ணை நலமபெரும் அரப்பமஞ்சள்
சொல்வியவிதங்களெல்லாம் திருக்கிளரில்கொண்டுவாரீர்.

வசனம்.

வாரும்தாதிப்பெண்களா தெய்வக்குறத்தியின் யிஷ்டப்படி கல்ல சம்பங்கியெண்ணை அரப்புமஞ்சள் முதலாகிய அப்யங்கஸ்நானத்துக்குண்டாகிய வகையராக்களை ஜலதியில்கொண்டுவாருமதாதிகளா.

தாதிகள்சொல்-கவி.

கங்கையென்தாயேயுந்தன் கார்குழல்தன்னைசிக்க
பொங்கமாய்ஸ்தானஞ்செய்யும பூவாத்தயிலமெண்ணை
அங்கமுயிலங்குமஞ்சள் அன்புடன்கொண்டுவந்தேன்
யிங்கிதவகைகளெல்லாம் யின்பமாய்செய்திடாயே.

வசனம்.

வாருமம்மாதாயே தங்களிஷ்டப்படி தங்களுக்குஸ்நானத்துக்குண்டாகியவகையராக்களை கொண்டுவந்தேன் ஸ்நானஞ்செய்யுமம்மணி.

மின்னொளிசொல் வசனம்.

வாரும்குறமாதே உன்னிஷ்டப்படி யெனக்குஸ்நானஞ்செய்துவையும்குறமாதே.

குறத்திசொல் கந்தார்த்தம்.

பல்வரிசைசுடரொளிபோல் பிரகாசிக்க
பார்த்தியக்குறத்தியரும் மகிழ்ந்துபாரி
மெல்லியர்கள் தனைப்பார்த்து நகைத்துக்கொண்டு
மின்னொளியாள் பின்புரமேவந்துநின்று
சொல்லரியமயிர்கோதி முடிந்திருக்கும்
துங்கமணிதங்கசடை தன்னைப்பிரித்து
யெல்லையில்லாயின்பசாரங்கள் பொங்கி.

குறத்திசொல் தரு.

பொன்னைக்கையிலெடுத்தாள் — மின்னொளியின்
மினிக்குழல் — விரித்தாள்
பொன்னே அழகுபெண் — பிராணகண்ணே பெண்ணே உன்னை
வர்ணக்கிளியே — மனம்வருமோ உனைப்பிரிய-குரு
வஞ்சியுன்னிட — கெஞ்சமகிழ்
தனைநெய்யதனை — கொஞ்சிகொடுப்பார் (பொன்)

மின்னொளிசொல்கவி தர்க்கம்.

தையலேகுறமாதே குழல்கண்கோதி
தளவனைகவிசை சமர்த்திநீதான்
வையகத்துமானிடரும் உனக்கொப்பாள்
பயிர்கோதும்வகையார வண்மைதானே.

குறத்திசொல் கவி.

மைவிழியேசீராமெ மஞ்சள்சென்று
வாசனையின்திரவியங்கள் மகிழ்ந்துமுழ்க
அய்யமில்லமின்னொளியே யெழுந்துவாராய்
அபிஷேகஞ்செய்திடுவேன் அருண்மயிலே.

மின்னொளிசொல்-வசனம்.

வாரும்குறமாதே யெண்ணையிடுவதில் தாளவகையாக்கருடன் யெண்ணையிடுதல யிந்தயுலகத்தில உன்னைப்போல் யாவரையுங்கண்டிடேனடிகுறமாதே.

குறத்திசொல்-வசனம்.

வாரும்மின்னொளியே யெண்ணையிட்டுக்கொண்டாயல்லவா யினி திருமஞ்சனசாலைக்கு யெழுந்துவாரும் ஸ்நானஞ்செய்துவைப்பேன் மின்னொளியே.

மின்னொளி சொல் கவி.

பாவைகுறவஞ்சியரே மஞ்சனசென்றால்
பாண்டமதுநீதொடவும் கூடாதம்மா
பூவையேமோனமயக்கமே வேண்டாமடி
பொற்கொடிமார்தனையழைத்து ஸ்நானஞ்செய்வேன்.

குறத்திசொல் கவி.

தேவையுன்மாதாதியினால் ஸ்நானஞ்செய்தால்
தேர்விஜயன்வருமுதாது அருமைமானே.



போவனோதேயெனதொழிக்குப்பகிலப்பேசாதே
பொற்கொடிநீசொலனுமெழுமிதுவாமெடி.

மின்னொளிசொல்வசனம்.

வாரும்குறமாதே திருமஞ்சனசாலைக்குச்சென்றால் பாண்டங்களை நீதொடலாகாதே ஆகையால்தாதியர்களால் ஸ்நானஞ்செய்துக்கொள்ளுகிறேன்குறமாதே.

குறத்திசொல்-வசனம்.

வாரும்மின்னொளியே தேர்விஜயநான உன்புருஷன்வருவது அருமைதான் நானிதோபோகுரேன் மறுமொழியொன்றும்பேசாதே மின்னொளியே.

மின்னொளிசொல்-கவி.

சஞ்சலங்கள்நினையாதே குறத்தியாரே
சாமார்த்தியம்யென்றன்மேல செய்யவேண்டாம்
வஞ்சியரேயிவ்வுலகிலுள்ள மாதரெல்லாம்
வண்மையுடன்யென்னைப்பழிக்க வாய்த்ததிப்போ
மிஞ்சியுந்தன்மாயவலை சிக்கினேன்யான்
மீளவகையில்லையெந்தன் விதியிதாகும்
மஞ்சனநீர்சாலைபுக்கு நின்றுநைந்து
வருகுவாய்மலைக்குறத்தி வருகுவாயே.

வசனம்.

வாரும்குறமாதே உன்னுடைய சாமார்த்தியமெல்லாம் யென்பேரில்பாராட்டாதே யிவ்வுலகிலுள்ள மாதர்களெல்லாம் யென்னைப்பழிக்குமகாலம் வந்துசம்பவித்ததே உன்வலையிலும் அகப்பட்டேனல்லவா வாரும் மஞ்சனசாலைக்கு ஸ்நானத்துக்குப்போகலாம் வாருங்குறமாதே.

குறத்திசொல்கவி.

கன்னியெனும்நாரியரே உனக்குக்கு
கட்டளையின்படியட்ட மென்னவென்று
மின்னொளிபால்ஸ்நானந்தான் செய்தபின்பு
வெளியாய்வந்துமனையும் கதவடைத்து
சொன்னபடிதான்பூட்டியிருப்பீரென்று
சோதிபுனை ஸ்திரிசைபிரகசிக்க
சின்னகுறபெண்மயிலபோல் வந்தமன்னன்
தேர்விஜயன்பூபனுமே யிடங்கொண்டானே.

வசனம்.

வாருங்கள் தாதிமார்களே மின்னொளியாள் ஸ்நானஞ்செய்து உருமலவும் இந்த திருமஞ்சன சாலையின் கபாடத்தைதிறவாமல் தாள்பூட்டிவிட்டேன் நீங்கள் ஜாக்கிரதையாயிருங்கள் தாதிகளேயென்று தன் பல்லக்கை பிரகாசிக்க கைதந்துக்கொண்டு மின்னொளியாள் ஸ்நானத்துக்கு திருமஞ்சனசாலைக்கு திடக்குடன் விட்டுக்கொண்டு உள்ளுழைந்தாள் குறமாதானவள்.

தாதிகள்சொல்-கொச்சகம்.

பல்வரிசைவிளையது பார்த்தீரோ தங்கைப்பூர
வில்விஜயபூபனிட வேஷமடிக்குறத்தி
நற்காலமாச்சுதென்று காய்ந்தியாள்மின்னொளிக்கு
செல்வமுள்ளமஞ்சனையை ஜோடிப்போமவாருமம்மா.

தாதிகள்சொல்கொச்சகம்.

இனிமொழியுங்கிளியரும் கேளிக்கையுமாவிக்க
அணிநிலவுபிஞ்சணையில் துலங்குமலர்தனைப்பரப்பி
கனிபெரசெம்மாச்சியரும் கண்மணிமஞ்சமதை
ஒளிபெரவும்ஜோடித்தோம் வருகையுடன்மாதர்களே.

குறத்திசொல்-கவி.

தங்கமாய்மஞ்சமதை யலங்கரித்து
சகலசிமணைகளுமே பரிமளிகக
பெங்குலவாமணிவலைகயின் குலைப்புகட்டி
பின்பமுளைத்தரப் படம்விரித்து
துங்கமதன்ரதியாரும் களிக்குமவண்ணம்
சுந்தரமாய்ஜாக்கிரதை தான் செய்திருக்க
அங்கமகிழ்மிளக்குறத்தி மின்னொளிக்கு
அபிஷேகம்செய்யமொரு அனுப்பாரீர்

குறத்திசொல்-ஜம்பை-தரு.

பேடைமலர்கன்னுரேனே
ஆடைகளைகளையுமம்மா

பெண்மனரசேமின்னொளியே
அபிஷேகம்செய்திடுவேன்

மின்னொளிசொல்-ஜம்பை.

அபிமானமாராமல்
விபரீதமில்லாமல்

ஆடைக்களைந்திடலாமோ
மெலதியேயதாயில்தரிப்பேன்



குறத்திசொல் ஜம்பை.

தரித்திருக்கும்துகில்யாவும் தடையன்றிகளைந்திடுவாய்
கருத்தரிந்தகுறத்தியின்முன் கண்கூச்சப்படலாமோ.

மின்னொளிசொல் ஜம்பை.

கூச்சமவையாதென்றுரைத்த குறத்தியுந்தன் அருள்படிக்கு
ஆச்சதென்றுதன்உடைகளைந்து அகற்றிவிட்டேன் அருமையுரே

குறத்திசொல் கவி.

பூக்குமிழுமின்னொளியும களைந்தபோது
பொற்குடம்போல் கொங்கையுடைய்தெனவைக்கண்டு
சாந்தமில்லாமதன்கணையால மயக்கமின்று
சந்தயலர்மேல்தனஞ்சயக் குறத்திவீழ்ந்தாள்.

மின்னொளிசொல் கவி.

காந்தியுள்ளமின்னொளியும் கவலையாகி
கானகத்துகுறமாதே நீயுமிப்போ
சோர்ந்துவிழக்காரணமேன் உண்மையாக
சொல்லென்றாள்பெருந்திருக்கு மில்லென்றுளே.

வசனம்.

இந்தப்பிரகாரம் மின்னொளியாள் ஸ்நானஞ்செய்யும் மஞ்சத்தில் சேலைகளைகளைந்துவைக்க பொற்வேஷமகொண்ட குறத்தியாகிய தனஞ்செயனுக்கு மன்மதவிகாரத்தினால் சோர்ந்து மின்னொளியின்பேரில் விழ அதைக்கண்ட மின்னொளி பேதமடிகுறமாதே நீயைக்கக்கொண்டு யென்பேரில்விழுந்தகாரணம தெரியும்படி யுண்மையைசொல்லுயென முந்துவில்லுமென்றுகேழ்க்க அப்போது குறமாது சொல்லுகிறவிதங் காண்க.

குறத்திசொல்லுகிற கவி.

மேகனமும்மின்னொளித்த பெண்மணியும்
வேறுநிதயோசனைகள செய்யவேண்டாம்
பாயமதிலுதித்த அரசகையாருககும்
அலலியர்க்குமிராமுழுதும குறியுரைத்தேன்
யோகமாய்கண்சொரிந்த நித்திரையாலும
பென்மதியுமயங்கியுன்மேல் வீழ்ந்தேன்யானும்
வேகமுடன்விஜாபிக்கே வருகுமுனனே
வின்மதிமோகஸ்நானமது செய்திடாயே

வசனம்.

வாரும் மின்னொளியே நீயொன்றுக்கும் சந்தேகப்படாதே விரா முழுதும் ஆரோக்கியமாக்கும் அஸ்வினிக்கும் குறியுரைத்து கண்விழித்தபடியல் நித்திரை மயக்கத்தால் விழலாயிற்று இப்பவுமதனைந்தெ யாகிய உன்புருஷன் வருங்காலமாகிவிட்டது சதுதியில்ஸ்நானஞ்செய்யம் மின்னொளியே.

குறத்திசொல் சிந்து-தரு.

கொம்பனையாள் மின்னொளிக்கு வளைக்குறத்தி
கொங்கைகுலுங்கிட மின்பருவமே
சபரமுன்னாபரமேயும இச்சிமிழுடனே
சந்தனக்குழம்புவிட்டு பிங்கைமிழ்வாட்ட
திருப்புருப்புகஸ்தூரியும் சிக்கையுடன்
சேர்ந்தசோர் அத்தர்பன்னீர் புனுகுகளும்
கருங்குழல்தனைக்கோதியே குறத்தியரும்
கண்மணியோ அன்னமே மின்னொளியென்றவள்
கொங்கைமீதில் மின்பமுடனே மஞ்சளுடன்
குங்குமக்களம்பமதை மெதுகுப பூசினாள்
சங்கையற்று அங்கபாவையும் செங்கரத்தால்
சாந்துசவ்வாதுகள்பூசி யெந்நிறைக்குமே
வெள்ளிரதுவிளங்கி பதமுடன்
விட்டுசொரிந்துரோமம தட்டிகோதினாள்
வர்ணமுள்ளவஸ்திரத்திகால் துவட்டியே
சொர்ணதுயிலகற்றிவெளி தோகையர்வந்தார் (குறத்தி)

குறத்திசொல்-கொச்சகம்.

வளைக்குறத்திதன்கரதால் மாதரஸ்நானஞ்செய்து
கனத்துகிலன்பூசைசெய்து கடவுள்தனைத்துதிபுரிந்து
மனபதனிலேமன்னவரை மங்கையருயமிணை நிருக்க
முனைந்துகுறவஞ்சியவள் மின்னொளிக்குவேயுரைப்பாள்,

குறத்திசொல்-கவி.

வடிவுடையகொடியிடையே வனிதையாளே
வான்விஜயவர்வருமவேளை யாசகதிப்போ
சடிதியிலுன்கழுத்திவிபலர்கள்சூடி
தங்கனவமணிபணிகள் அரிக்கவேண்டும்



நொடியதனில்பெண்கள்தனை விநோதமாக
நூதனமாயலங்கரிப்பேன் உண்மையாக
படியிசைவோராதிசயிக்க பூஷணத்தின்
பவழமணிபெட்டிதனை யெடுத்துவாராய்.

குறத்திசொல் தரு.

தாதியர்கள்மின்னொளியின் சர்வபணிபெட்டிதன்னை
கோதிலாக்குறத்தியின்முன் கொண்டுவந்துவைத்தனர்கள்-சுரு
கொஞ்சியிளங்கொடி வஞ்சியமிழ்தமே
ரஞ்சிதமுடனே மிஞ்சிதிரங்களை (தாதி)

தாதிசொல்-தரு.

சொல்லரியதங்கத்திருநல் பல்வரிசைசிட்டெடுத்தாள்
மெலவியோள்குழல்தனக்கு விந்தவிதமலாமுடிப்பாள்சுரு
விருப்புபொன்னிதழ் அருப்புமுல்லையும்
பெருக்கதிரொளி பிரையுபகட்டியும்

தாதிசொல்-தரு.

நவமணியின்கொண்டைக்கு ரத்தினத்தால்கொப்புகளும்
அவனியைவிலமதிக்குய ஆபசரப்பளியும் சுரு
அஸ்த்தகடகமும ஆசையுந்தண்டையும்
சொஸ்த்தமாயே சோதிக்கமலும்

தாதிசொல் தரு.

மூக்குத்திசிந்தாக்குப்பொட்டு முத்துசரபகோர்வையுடன்
பார்க்குமவிழிமையெழுதி பட்டபொட்டியாணமுமிட்டாள்
பச்சைரத்தினம பதித்தவளையலும்
கச்சடௌ கங்கணங்களும்

குறத்திசொல் கவி.

சொர்ணகிளியன்னமயில் தனைபபோலுன்னை
ஜோடித்தேன்சுந்தரமாய் தோகையாளே
வர்ணமுள்ள அருஞ்சுனையும தாதிமார்கள்
வண்ணமுடன்சமைத்திருப்போர் சேடிமார்கள்
பர்ணசாலைபதிற்சென்றுகாமும்
பலதனைக்கள்செய்துபசி யாற்றிவேணும
மன்னவரிசேதாகிபிஷத்தில் வரவும்போரார்
மயக்காமல்முன்னமதி உட்கொள்வாயே.

வசனம்.

வாரும்மின்னொளியே உன்னை அன்னத்தைப்போல் அபாணுடிகளோக்கொண்டு அணிந்துகொடுத்தேன் இனிமேல் உன்நாயகன் வரும காலமாய்விட்டது ஆகையால் தாதியர்கள் போஜனத்துக்கு அழைப்பதால் போஜனசாலைக்குபோகலாம வாரும்மின்னொளியே.

மின்னொளிசொல் கவி

தமியனார் தாதிமாரே சமையல்கள் ஆச்சுதோதா.
பெருவிதபலகாரங்கள் விதவிதபதார்த்தத்தோடும்
நகைமொழிமுகமலர்ந்த நங்கையாள்குறத்தியார்க்கும்
தகமையாயெந்தனுக்கும் அளியல்கலவித்திடாயே

வசனம்.

வாரும்தாதிப்பெண்களா யெனக்கும் குறத்தியாருக்கும் போஜனமளித்துவாரும் பெண்களா.

குறத்திக்கும்தாதியர்க்கும் தர்க்கம்-தரு

வாழையிலைவிரித்து — வர்ணக்குறத்தி மனமகிழ
வர்ணப்பலகாரவகை
அன்னமுமருசுவையும் — தோழிமார்களுமளித்தார்

தாதிசொல்-தரு.

பூவையாள்மின்னொளிக்கு — பொற்கிண்ணத்தளியலன்னம்
பொங்கமுடனே — படைத்தாள்
செங்கமலத்தாதியவள் — தேவைகளானவைகளை

குறத்திசொல் தரு,

கோவைக்கனிபோசிக்கும் — குணக்கிளிபோல்வனக்குறத்தி
கொஞ்சிமனமகிழ்ந்து — மிஞ்சியெழுந்தாதாவி
யோர்வார்த்தை — புகல்வாள்

குறத்திசொல்-கவி.

அன்புமிகப்பிரியமுள்ள அருவையான
அழகுபெருமின்னொளியே யொன்றுகேளாய்
உன்னுடனேயொருமிக்க வாணுங்கூடி.
உண்ணுதற்கு அபிலாசை யானுங்கொண்டேன்
பின்னுமெயெந்தன் மலர்க்கரத்தாலுந்தனக்கு
யோர்பிடியேபிடிசாத மூட்டவேண்டுமெ
சொன்னவனசம்மதமோ யில்லையோதான்
கருக்குடனேயெந்தனக்கு உரைசெய்வாயே.



வசனம்.

வாரும்மின்னொளியே உன்னுடன்கூட ஒருகலத்தில் யிருவரும் போசிப்பதாக அபிலாசைகொண்டேன் அதுதவிரயென்கையாலுனக்கு ஒருபிடிசாதமூட்டவேண்டுமெ அதற்குஉனக்குசம்மதமோயில்லையோ சொல்லுமின்னொளியே.

மின்னொளிசொல்-கவி.

ஏதடிநீகுறமாதே நல்வார்த்தை
யின்பமுடன்யெந்தனுக்கு யியற்றவந்தாய்
பேருமுள்ளபுலால்போசிக்கும சாதியும்
யிராமுடனுருமிக்க புசிப்பேனென்றாய்
மாதர்களென்சக்களத்தி யாருபேரும்
னைமையுடனுபழிக்கும்வகை தேடவந்தாய்
பாதகியேயிதமொழி பகரவேண்டாம்
பாங்கியர்களுனக்களித்த அமுதையுண்பாய்.

வசனம்.

வாரும்பாதகியான குறமாதேநீங்கள் புலால்யென்ற மாமிசம்போசிக்கும் பேதகஜாதி நீயென்னுடன் போசிக்கவும யெனக்கு ஊட்டவும் தகுமா யென்சக்காளத்திகளாருபேரும் யிதுகேட்டால் பழிப்பார்களடி உனக்குதாதியர்களளிட்ட அமுதையுண்ணுவாய்குறமாதே.

குறத்திசொல் கந்தார்த்தம்.

இருவருமேயொருகலத்தி லுண்ணப்போகா
தென்றுரைத்தமின்னொளியே சொல்லக்கேளாய்
அருவையர்கள்துரோபதையும் அல்லியேகடும்
யான்கூடியமுதுண்ண வில்லையோடி
பெருமையுள்ள அவர்குலத்தைவிடவுன்ஜாதி
பெருசோடியொருகாலும் கூடாதென்றாய்
மருவிடவுய்விஜயனுந்தன் மடத்தைதேடி.

குறத்திசொல் தரு.

வார்த்தையறிவேன்-உந்தனிட — தீரத்தைதெரிவேன்
போரதேசரியந்தன் — பொற்கூண்டதனாக்கி-கரு
புல்லரிவுள — மெல்லமின்னொளி
இல்லேன்அரைமொடி — செல்லுவேனடி (வார)

மின்னொளிசொல் கந்தார்த்தம.

சிறையிருந்தேன்யெந்தனை நீ பிரிந்து
  தேசமெல்லாம்பழிக்கயிடம செய்தமாதே
குறையென்னாமுன்செய்த கொடுமையோதான்
  குரத்தியிடபெச்சலது புசிக்கயானும
முறைகளாயுஞ்செய்கை யறிந்திடாமல்
  மூடமதியாலுன்கை யகப்பட்டேனயான்
நீயுரைமொழிக்குள் யகப்படடேன்ஒருமையாக

மின்னொளி சொல்-தரு,

உன்னூவய்வாடி     ஒருகணத்தில் அ ன்றமேகூடி
வண்ணக்குரத்தியுன்     பெண்ணம்போலயிருவரும்-கரு
  வல்லவிஜயனார்     மெல்லயில்விடம்வர
  கல்லமொழிதனை     சொலலுவாயடி (உன்)

குரத்திசொல்கொச்சகம்

பஞ்சவர்ன்னகிளிகளது டஞ்சுகூமுடநீமெடுத்த
குஞ்சுகளுக்கிரையளிக்கும. கூர்மைமேல்குரத்திரும்
நெஞ்சமதுதான ரித்து கேர்விழிக்குஅமுதூட்டி
வஞ்சியவன்தானு ண்டு மகிழ்வியுடன்யெழுந்திருந்தார்

மின்னொளிக்கும்-குரத்திக்கும்-தர்க்கம்.

அருசுவையுடனமுது     அருந்தியாச்சுதே
ஆனவரகாணமென ா     அருங்குரத்தியே

குரததிசொல்தரு,

காணுமென்றுமனமுருகி     கவலைவையாதே
காண உன்சுபத்ரைவிதி     கடிகிவாராண்டி

மின்னொளிசொல் தரு.

வாரார்சுபத்ரைவிதியென்ற     வார்த்தையுண்மையோ
வஞ்சியாளேகாமன்கணை     மிஞ்சுதெனசெய்வேன்

குரத்திசொல் தரு.

என்னசெய்வேனென்றுமனம     யேக்கிடாதடி
யாகசேனைவிதிவிட்டு     யேகிவாராண்டி

மின்னொளிசொல்-தரு.

யேகிவாரனென்றுமன்னன்     யேமாற்றுகிறாய்நீ
யின்பமுள்ளமலர்கரத்தை     யெப்போகாண்பனே



குரத்திசொல்--தரு.

காண்பனோடியென்றுயென்மேல்     கனாத்துவிழுறாய்
கன்னியல்லிவிதிவிட்டு     காளைவாராண்டி

மின்னொளிசொல் தரு,

காளையந்தகிரீடியனை,     காண்போதினில்
கட்டிமுத்தமிட்டுயெந்தன்.     காதல்தீருவேன்

குரத்திசொல் தரு.

நீரனுந்தன்தெருவிலேதோ     தேடிவாராண்டி
தேன்மொழியேதுயிலுமஞ்சம     சேருவாய்நீயே

மினனொளிசெ ல்-கவி.

நட கவும்முடியவில்லை நானென்னசெய்வேனம்மா
மட கொடிமானேயானும மஞ்சமீதெவ்விதமாய்செல்வேன்

குரத்திசொல்-கவி.

நிடத்தைநீவிடவுமவேணடாம் தேவியென்றோள்பிடித்து
விடத்தையுமவிடமெஞ்சமவிடுதியில்செல்லுவோமே.

குரத்திசொல்-கவி

சித்திரக்கூடமஞ்சமசிறப்பையும குர திகண்டு
மெத்தவுமமனங்களித்து மின்னொளிதனைநோக்கி
நத்தியேசிறையிருக்கும நங்கைகேளிந் கோலம்
உத்தமேசோர்கள்ளமன்னன் யுண்டோடி ரைசெய்வாயே.

வசனம்.

வாரும்மின்னொளியே நீ வெகுநாளாய் சி யிருப்பவளுக்குயிப் பேர்ப்பட்ட சப்ரகூடமஞ்சமயிருககும் உன்னிதத்தை யென்னவென்று சொல்லலாம யேதாகிலும் கள்ளநாயகருண்டோடிமின்னொளியே,

மின்னொளிசொல்தர்க்கம-தரு.

நாதனைகைலாசவாசநீதா     குரத்தியின்முன
நாணவிதியோ     மலர்ப்பாதா-கரு
  நங்கையாவளுப்பரிக்க     பங்கம்செய்யயெந்தனை
  பொங்குமுடனேவைந்தாள்     மங்கைபங்கனே (நாதா)

குரத்திசொல்-தரு.

உன்னைநான்பென்னசொன்னேனை     பெண்ணே
சிவனைவேண்டி     ஒப்புகிறாய்நீமுன்னே-கரு
  ஒப்புமவிஜயனும்     அர்ப்புதமஞ்சனைக்கு
  செப்பினேன்தருமென     நட்பிதமென்னடி (உன்னை)

மின்னொளிசொல் தரு.

கற்றவித்தைகள் போகுமோ சாஸ்திரமறிந்த
கள்ளப்புருஷன் பெரியோர்தாம் சொல்லுகிறார்
காதலுடனே யென்னை சோதனை செய்குறாய்
பேதை நீ முழு பாதகியேடி (கற்ற)

குறத்திசொல்-தரு.

கோபமென்மேல் செய்குறாய் பாரும் விஜயன் வாரார்
குறத்தியிருக்கலாமோ நேராய்-சொல்லுறேன்
கொஞ்சிக் கூடத்தானே செயங் கொண்டு
வஞ்சிமாருக்கேனம்மா கெஞ்சமயங்கிடுவோம் (கோப)

குறத்திசொல்-கவி.

குறமாதுவடிக்கு நிகரான கொடியாயுனது புருஷன்
வருவதற்கு சமயம் வேண்டும் வார்கோன் போய் நின்
அருகே குறத்தி விட்டு யானைத்தாழும் விசும்புடை
அருகடந்த மார்க்கம் துரோபதையிடம் செல்லென்றாள்.

வசனம்.

வாரும் மின்னொளி நான் நீர் நின்றிருக்கும் குறமாதுப் பெண்ணுடைய அங்கத்தில் அவர் பொன்னால் வெறிலாகாது தன் உருவம் கொண்டு குறத்தியின் தேரில் அனுப்பிய அதை ஆகாய மார்க்கமாக துரோபதையிடம் போய் சேரென்று சொல்லி அனுப்பிவிட்டு தன்மயமாக அர்ச்சுனமகாராஜன் வருகிறவிதங் காண்க.





அர்ச்சுனன் சொல்கவி.

பூண்டிருந்த குறவடிவம் தனையகற்றி
பொற்கொடி துரோபதையினிடம் அனுப்பிவிட்டு
காண்டீபனர்ச்சுனனும் மனங்களித்து
காமசுந்தர நிருபவங்கொண்டு
நீண்ட வஜ்ஜிர முடியோ டலங்கரித்து
திகதிகனப் பல்வரிசை பிரகாசிக்க
வேண்டிய மையலாகி மின்னொளியைக்கிட்டி
விஜயபதி மனைக்கொளிக்க வருகின்றானே

அர்ச்சுனன் சொல் தரு.

மின்னொளியாள் தன்முகத்தில் வெண்ணமாய் விழிப்பேனென்று
விஜயபூபனும் வாரானே
இட்டமாகுதெனை மைக்குழலாளிடம் (விஜய)
அன்னநடையப்போலும் அடிமேல் அடியைவைத்து — தரு
ஆசையுமீறியே நேசமதாகிய
போசனை செய்துமே கூசிநடந்து (மின்னொ).
வஜ்ஜிரத்தாணிலே களிக்க வர்ண்ணமணிகைத்தடந்து
வனிதையாள் சித்திரக் கூடமும் வந்து
ஒளிந்துமே சிந்தை தெளிந்துமே (வனிதை)
உச்சிதசிங்காரக்கூடம் ஓடி மறைந்தனின்று — தரு
ஒதுங்கி ஒதுங்கியே உன்னிதமாகவே
பதுங்கிப் பதுங்கி மிக பாழைகளாகவே (வஞ்சி)

மின்னொளிசொல் தரு.

தாதிகளாக நம்மைக்கண்டால் யேது சொல்வாளோவென்று
தயங்கி மயங்கி நின்றுமே
சத்துப்படாமலே மெதுவுடன் (தயங்கி)

அர்ச்சுனன்சொல் தரு

சோதிமின்னொளி யென்ன சொல்வாளோ அறிகிலேன்
சூதுசெய்து குறமாதனைப் போலுநான்
வந்துபேசியவள் நீதியையறிந்தேன் (சோதி)
மஞ்சம் விடுதிக்கேகும் வாசற்படி மறைந்து
மதுமுகத்தாதிமார்களும்
மன்னனைக்கண்டிட உன்னிதமுடனே (மதி)

சுந்தமலர்க்கரத்தால் காட்டிக்கண்ணை நகையாக
காதலுடன் மின்னொளி வாதனை தீர்க்கவே
பேதையின் விழிதனை நாதன் மறைத்தனன் — சரு

வேறு தரு.

சேதன் படர்விரித்து செய்யகிரணம்படும்போல்
தேர்வினையன் மின்னொளிக் கண்மூடினான்
பாதநகம் பவளமாய்ப் பங்கயந்தன்கையால்
பல்லவவிரல்களைத்து வாடினான் — சரு
பத்தினி மின்னொளி இக்கமரிந்திட
சத்தியெருசிவர நத்திகள்ளாடினான் (சேத)
மலர்விழி பெருகரத்தால் மறைத்து மருகையிறுல்
மங்கையர்கள் ஸ்தனத்தின் மீது தாவினான்
கலைகளனைத்து காவலரும் ஆதிகளை
கண்ணிமைப்பிடி காண் ...றும் மேவினான் — சரு
கட்டியே முத்தமிட்டுத் தழுவியே
கெட்டியாய் தன் விழிபொட்டென ஒழுங்கான் (சே)
மானே தேனே கா... புன்னை மேனி நிலவென்று
மதத்தயானையைப் போல் குதித்தாளன்
வீறுவினையிருந்தின் வேகமனம் போகவென்று
விதிபுனக்குயேன் வென்று ...தனவன் — சரு
விட்டுமதன் கணை தொட்டுமே புஞ்சாம்
பட்டுகோதிய கட்டிபுரண்டான் (மானே)
கண்விழியால் வெம்மைக்கண்டால் வெள்ளை சொல்லுவனோ
கட்டழகி பெரிவர் காணிகான்
வண்மையான விஷ்ட்டையினில் வருந்திடாமலிருக்க
வஞ்சமனதினில் இருக்குமோவென்று
மன்னவனும் பலவாறாக வெண்ணினான் — சரு
மங்கையாள் திருவிழி பொங்கமாய் விட்டுமே
கங்கையாள் முன்வர சங்கையதாகினான் (கண்)

தாதிசொல் கவி

விசையபதி மின்னொளி பின்வந்துநின்று
விழியிரண்டும் திருகரத்தால் மறைத்தபோது



மிச்சைபல தாதியர்கள் எதிரில் நின்று
இலகுமொழிய மியரே வுன்னையிப்போ
திசைபுகழும் மலர்விழியை மறைத்தார் யார்தான்
திருஷ்டாந்தம் எங்களுக்கு தெரியச்சொல்வாய்
அசையாமல் பிடித்தவரை யின்னாரென்று
அருளுமென்று மனமகிழ்ந்து உரைசெய்வாரே.

மின்னொளி சொல் கவி.

தையலரே என்தாதியரே என்னவிந்தை
சமர்த்தெதன்தன் சமர்த்தியம் பார்க்கின்றீரோ
மைபதித்தக் கணையாழி தன்னைப் பார்த்தால்
கந்தர்ப்பர் இவர்தானடி உண்மையாக
அப்பமில்லாதென்னை யொருவர் தொடுவரோடி
ஆழகர்க்கின்றும் மனம் வந்ததென்று
வெவ்வினைதான் பழிக்கும் பிராணநாதா
விடுங்காணும் என்றெழுந்து துதிசெய்தாளே.

மின்னொளி அர்ச்சுனனுக்கு எச்சரிக்கை தரு.

மன்னுபுகழ் கண்ணாயுந்தன் மலரடிக்கு நயானசரணம்
கன்னிக்குறவேடமதை கலைத்திடாயி சரணம்
காதலுடன் என்னை சோதனை செய்தது
நீதியோ புகழ்க்கிது நாதனே சொல்லும்

அர்ச்சுனன் சொல் தரு.

குறத்திபுருமனைத்தே என்று கூறுமொழி என்னு
கருத்தினொன்றும் எந்தனுக்கு கலக்கமில்லை சொன்னேன்
கண்மணி சொல்லிய காரணம் தெரியேன்
உண்மையாயுரைக்குறேன் ஒன்றும் நானறியேன்

மின்னொளி சொல் தரு.

ஒருசேதிபுமரியே என்ற ஓதும் பிராணநாதா
மாநிலேபோயுன் திலர்தப்பொட்டு மறைக்கமாட்டீரோ
மாசில்லையாகிய சாக்ஷிகள் வேணுமோ
ருசுமரித்தேன் இக்காக்ஷிகள் உண்டோ

### அர்ச்சுனன் சொல்லுது

திக்கட்டையில் கொட்டேடென்று சிந்தித்தலோ வைதாய்
விழ்ட்டெபல்லேயும் வன்டே என்று பிக்கோ தனை செய்தேன்
பொன்னிடக்கப்பணி அன்னமே மின்னொளி
மன்மதன் வாளதை யன்னமே தீரடி. (திக்)

வசனம்.

அதோகேட்டபடி யென்றபிப்பிராயமாக வந்த அர்ச்சுனமகாராஜன் மின்னொளியாளை ஆசீர்வதித்த மங்களம் சகியும்போல் கூடிக் கலந்து சுகவாழ்வைத்தந்த மின்னொளியாளிடம் விடைபெற்றுக்கொண்டு துரோபதை அல்லியரசாணி சுபத்திரை முதலிய பெண்களுடன் அரசாளவரிடம் வந்துசேர்ந்து சுகவாசிகளாய் வாழ்ந்திருந்தார்களென்பது சுபமஸ்து.

### மங்களம்

இராஜீவலோசனா ராஜப்பிரகாசனா
மங்களம் சுபமங்களம்
பாராவாரித்தியாக பரப்பிரம்மயோகி
மங்களம் சுபமங்களம்
பிருந்தாவனசஞ்சாரி பிரபக்தமுராரி
மங்களம் சுபமங்களம்
மிருதுவாணராஜீவ பிதமோஹமதேவா
மங்களம் சுபமங்களம்
அனந்தகுணகெம்பீர அநாதுயல்வாதரா
மங்களம் சுபமங்களம்
ஜனகபுத்திரிகாந்தா ஜயித்தஜகப்ரக்யாதா
மங்களம் சுபமங்களம்
புவிதனிலர்ச்சுன புகழ்பெறு மின்னொளிக்கும்
மங்களம் சுபமங்களம்

**மின்னொளி குறவஞ்சி நாடகம்**

**முற்றிற்று.**

—(*)—

# நூதன புஸ்தக விளம்பரம்.

இதனடியிற் கண்ட [illegible] சென்னை [illegible] பேட்டைவீதி [illegible] அடியில்கண்ட புஸ்தகங்கள் [illegible]. இன்னும் அநேக [illegible] புஸ்தகங்களும் [illegible] பெற்றுக் கொள்ளலாம் [illegible] வேண்டியவர்கள் [illegible].

| | | | |
|---|---|---|---|
| [illegible] | 2 | 0 | |
| கார்த்திகேயர்கதை | 0 | 12 | 0 |
| [illegible] | 0 | 8 | 0 |
| வைத்தியதிரவியங்கள் | 0 | 8 | 0 |
| புஷ்பந்தாகம் | 0 | 5 | 0 |
| [illegible] முதற்பாகம் | 0 | 3 | 0 |
| ஷை இரண்டாம் பாகம் | 0 | 3 | 0 |
| [illegible] முதற்பாகம் | 0 | 8 | 0 |
| ஷை இரண்டாம் பாகம் | 0 | 0 | 0 |
| காத்தமுத்து நாடகம் | 0 | 5 | 0 |
| இராமலிங்க நாடகம் | 0 | 6 | 0 |
| [illegible] நாடகம் | 0 | 5 | 0 |
| [illegible] நாடகம் | 0 | 5 | 0 |
| குலேந்திர நாடகம் | 0 | 5 | 0 |
| [illegible] | 0 | 8 | 0 |
| [illegible] | 0 | 5 | 0 |
| [illegible] நாடகம் | 0 | 5 | 0 |
| வாலிமோட்ச நாடகம் | 0 | 4 | 0 |
| [illegible] | 0 | [illegible] | [illegible] |
| [illegible] | 0 | 8 | 0 |
| [illegible] நாடகம் | 0 | 5 | 0 |
| [illegible] நாடகம் | 0 | 8 | 0 |
| [illegible] நாடகம் | | | |
| [illegible] | | | |
| [illegible] 1000 [illegible] | 1 | 0 | 0 |
| [illegible] | 1 | 0 | 0 |
| [illegible] | 0 | 8 | 0 |
| [illegible] | 0 | 4 | 0 |
| [illegible] | | | |

இங்ஙனம்-விலாசம்:—

கு. முனிசாமி முதலியார்

[illegible] பேட்டைவீதி, நெ-51, [illegible] சென்னை.